[illegible]

Vl. No. 16 19 April 1928

3L
8211, N28K.14
N28·1·16.
188999.

675 *Reg. No. M. 2324.* தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0

புற நாடு … … ரூ. 9 0 0

காரியாலயம்:—

*No. 11*, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஹு ஏப்ரல்மீ 19உ [No. 16.

MADRAS

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 301 |
| 2. | காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L. | 303 |
| 3. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L. | 306 |
| 4. | தமிழ்ப் பாடம் | 308 |
| 5. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L. | 312 |
| 6. | வானசாஸ்திரம் | 314 |
| 7. | மதிப்புரை (மேகதூதம்) | 315 |
| 8. | முல்லை (ஒரு சிறு பாட்டு) V. சூரியநாராயண சாஸ்திரியார் M.A.L.T. | 316 |
| 9. | பழமுதிர் சோலை, "சபரி" | 317 |
| 10. | வர்த்தமானம் | 319 |

## கலா நிலயம்.

### சொல்லால் முழக்கிலோ சுகமில்லை.

சொற்றொடர்களால் கட்டுண்ணும் தற்கால விபரீதங்களில் மாதர் இயக்கம் (Women's movement) என்பதுவு மொன்று. இக்காள் பிரசங்க மேடைகளிலும் பத்திரிகைகளின்பக்கங்களிலும் மற்று யாவர்தம் வாயிலும் காற்றாய் உலவுகின்ற இச்சொல்லே யன்றி வேறோர் உருவம் இல்லாத 'மாதர் சுதந்தரம்' என்னும் ஓர் விக்கிரகத்தைப் பெண்மக்கள் சிலர் தமக்கிடையே நிறுத்தி வைத்துச் சங்கங்களாகக் கூடி, அவர்களோடு அனுதாபம் கொண்ட ஆடவர்களையும் துணைகொண்டு, தமக்கே உரியதெனச் சில சுதந்தரங்கள் இருந்தனவென்றும், அவைகளைச் சுயநய சித்தம்வாய்ந்த ஆண்மக்களின் கொடுமையால் தாம் இழந்துவிட்டனரென்றும் குறைகூறி, இழந்தவச் சுதந்தரங்களை மீண்டும் பெறுமாறு பிரார்த்திக்கின்றனர். உண்மையே நோக்கின், தமக்கே சிறப்பாய் உரியதென இம் மாதர் கேட்பதுதான் யாதோ, அத்தெய்வந்தான் அளித்தற்குள்ள வரம் யாவதோ—அறிகிலேம்.

மாதரின் உரிமைபற்றி நடைபெறும் இவ்வியக்கம் நல்லதே என இந்நாட்டுப் பெரியோர் பலரும் கொள்கின்றனர். இதன் மூலமாக இந்தியாவுக்கு நலம் ப்ல பிறக்கப் போகின்றதென்பது அவர் எண்ணம். இந்தியாவிற்குப் பலவித நன்மைகள் பற்பல திசைகளிலிருந்து வருவதற்கு இருப்பன போலவே இம்மாதரியக்கத் திசையிற் காண்பதும் பேய்த்தேர் செய்தியோ, அல்லது நிலையாய நலம் பயப்பதற்குற்றமார்க்கம் இதுவுமொன்றோ, என்பது எம்மால் சொல்லக்கூடிய தொன்றன்று. இஃது எதுவாயினுமாகுக.

சிலதினங்களுக்குமுன் லாலா லஜபத்ராய் அவர்கள் "இந்தியாவில் மாதரைப்பற்றிய விசாரம்" என்னும் ஓர் பிரசங்கம் நிகழ்த்தினர். எப்பொருட்கும் மெய்ப்பொருள் காணும் அவாவுடையார் அப்பெரியவர் செய்த பிரசங்கத்தைக் கேட்டிருப்பின் விஷய ஆராய்ச்சி செய்வதற்குப் பேருதவியாகும். கேளாதார், பத்திரிகைகளில் வெளிவந்துள்ள அவர் பிரசங்கத்தை ஊன்றி ஓதுமாறு விழைகின்றோம். உலகப் போக்கினை உற்று ஆய்ந்தவரும், இந்துமதமென்பது வாழ்க்கையின் வழித்துணையே யன்றித் தத்துவக் கொள்கைகளல்லவெனும் சீரிய உண்மையைத் தெளிந்தவரும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரும் ஆயினவர் அப்பெரியார். அவர் மாதரைப்பற்றிப் பிரத்தியேகமான விசாரம் ஒன்றும் பெரிது கொண்டதாகக் காணவில்லை. "உங்கள் மாதர் முற்றிலும் விடுதலை யடையட்டும். அவர்களை நீங்கள் கட்டிவைத்திருக்கின்ற கட்டுக்களை அவிழ்த்து விட்டுவிடுங்கள்", என்று அவர் ஆடவர்களை நோக்கி இடித்துரைத்தாரேனும், இதுவும் இதைப்போன்ற ஒன்றிரண்டு வாசகங்களும், பிரசங்கத்தின் தலைப்பிற்கிணங்க வழக்கத்திற்கு ஒட்டிச் சொல்லித்தீரவேண்டுமே எனும் பான்மையில் வாயிலும் படாமல் அரைமனதோடு வந்திருக்கின்றனவே

யன்றி மற்ற வெல்லாம் மாந்தருள் இருபாலார்க்கும் பொருந்துவனவாகிய பொதுதர்மங்களையே நிலைகாட்டி வற்புறுத்துகின்றன. "எங்களை அறியாமையில் ஆழ்த்திவைத்துச் சுதந்தரக் கரையேறவொட்டாது தடுக்கின்ற ஆடவர்காள், இதுவுமக் கடுக்குமோ!" என முறையிடும் மடவார்க்கு லாலாஜி பகரும் உத்தரம் வேதவாக்கெனக் கொள்ளத்தக்கது. "மாதர்காள், நாங்களுமே அடிமைகளென்பதை அறியீரோ!" என எடுத்துக் காட்டியபின் தம்முரிமை என மாதர் தனியாகக் கேட்பதற்கு யாதுளது?

வாய்மையே நோக்கின் தமக்கே உரியதென யாது கேட்கின்றனர் மாதர்? சுற்றிச் சுற்றி வந்தால் எல்லாம் சட்டசபைகளில் ஓட்டெடுக்கின்ற செய்தியிலேயே வந்துமுடியும். இதுவோ உரிமை! கடமையன்றோவது! அக்கடமையை ஆண்மக்களே பெண்மக்களுக்கும் பாதகமின்றிச் செலுத்தமாட்டார் என்னும் சந்தேகம் உளதாயின், அது மிகவும் குறுகிய நோக்கமே யாகும். ஆடவர்கள் சரியாகச் செய்யாத விடத்துப் பெண்கள் தாந்தாம் சரிவரச்செய்து முடிப்பர் எனும் நிச்சயம் எங்கிருந்து வருகின்றது. எந்த விதத்தில் ஆடவர் பெண்களை அடக்கிவைத்திருக்கிறார்கள். ஒரு தெருவில் புருஷன் மனைவியைப் பாடுபடுத்துகின்ற வீடு பத்திருந்தால் மனைவியும் புருஷனை உயிரோடு வதைத்துண்ணுகின்ற வீடுகளும் பத்துவீடு அடுத்தடுத்து இல்லாமற் போகவில்லையே. பெண்களுக்குக் கல்வியைப் புருஷன் கற்பிக்கமாட்டேன் என்கின்றதாக நிலவும் ஒரு அபவாதம். புருஷர் எல்லாரும் கற்றவரா! கலாசாலைக்குச் செல்பவரெல்லாம் கல்வியா கற்கின்றார் என்று எண்ணுகின்றீர். வயிற்றைநிரப்புவதற்கு ஏதோவாயசைக்கப்பழகி வருகின்றார். இக்கல்வியைப் பெண்கள் கற்பதிலும் கல்லாமை மிகச் சிறந்தது. மெய்யாய கல்வியைக் கற்றவன் எவனும் தனது அகத்தமர்ந்த மாதருக்குப் புறத்தொரு தூண்டுதல் இன்றியேயும் உய்யவரும் உயர் நூல்கள் ஓதாமல் இரான். மனைவியிருக்க மனைவியும் ஒருத்திக்குப்பின் ஒருத்தியும் விவாகம் செய்து கொள்ளும் உரிமை புருஷனிற்கிருக்க, இருந்தாலும் செத்தாலும் ஒருவனோடு எம் மணவுரிமை முடிவானேன், என்று மாதர் சிலர் கேட்பது பரிதாபமே. சாத்திரங்களைக் கூறியும் மறுத்தும் இதன் நிமித்தம் வாதாடி விவகரிப்பதால் இருதிறத்திலும் பயனில்லை. மனையறம் நடத்துதற்கியன்ற மனப்பான்மை இல்லாத காலத்து விவாகக் கடமையை உரிமை என்று மயங்குகின்ற செய்தி இது. இந்தியா தவிர மற்ற நாடுகளில் பெரும்பான்மை இவ்விதத் தடைகள் ஒன்றுமில்லையே. அதனால் அந்நாட்டு மாதர் என்ன பதவி அடைந்துவிட்டனர்! என்ன சுகம் பெற்றனர்! 'நான் செய்து கொள்ளக் கூடிய கலியாணத்திற்குக் கணக்கில்லை, அதனால் நான் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றேன்" என்று தன் முதுகைத் தானே தட்டிக்கொண்டு சந்தோஷப் படுகின்றவர் யாராவது இருப்பாராயின் அன்னாரைக் காணப் பெரிதும் விரும்புகின்றோம்.

ஆஸ்தியைப்பற்றிய சுதந்திரம் மற்றொன்று. இவ்வகையில் புருஷன் பெற்ற பேறு யாவதென மதித்துப் பெண்களுக்கும் அது வேண்டும் என்று கேட்கின்றனரோ தெரியவில்லையே. 'ஊளப்பிற்கும்' கடற்கரைக்கும் தடையின்றிப் போவதை ஒரு உரிமை என்று வைத்துப் பேசுவதுபோலாம் இது.

ஆதலால், பெண்களுக்கென்று கேட்கின்ற இவ்வுரிமைகளை எல்லாம் வரிசையாய்ப் பார்த்தால், புருஷன் செய்வதையெல்லாம் அவர்களும் செய்யக்கூடியவர்களாயிருக்கவேண்டும் என்னும் ஒரு உட்கருத்தே எஞ்சி நிற்கின்றது. செய்வனவெல்லாம் செய்து புருஷர் என்ன சாதித்தனர். அன்போடும் அறத்தோடும் இயன்ற வாழ்க்கையை எய்த யாவருக்கும் உரிமையுண்டு. அதை யாவராலும் கவர இயலாது. அன்பும் அறமும் துறந்து அடிமைகளாய்க் கிடக்கின்ற மாந்தர் வாழ்வினின் உரிமையை இழந்தவராவர். நும்போல் நாங்களும் வாழ்வைச் சிதைத்துக்கொள்கின்ற உரிமை வேண்டுமெனக் கேட்பாருமுளரோ. அவரைக் கேட்கவைப்பாரும் தீமையேயல்லாது நலம்புரிவார் ஆகார்.

ஆடவர் பெண்டிரென்று மக்களைப் பிரித்துப் பார்க்கவேண்டிய நியதியே யில்லை. லாலிஜி கூறியபடி புருடர் புருடர், பெண்கள் பெண்கள் அவ்வளவே. அவர்கள் அடிமைகளாயின் இவர்களும் அடிமைகளே. அடிமைகளுக்குள் ஏற்றத்தாழ்வில்லை. இவ்வுரிமை அவ்வுரிமை என்னும் சில சொற்றடர்களுக்கு அடிமையாயிருக்கின்ற காலம் இக்காலம். உண்மையற்றன யாவும் உயிரற்றன. இச்சொற்றொடர்களில் உண்மையில்லை. ஆகையால் அவை உய்க்கும் இயக்கங்களில் உயிருமில்லை. ஆண் பெண் இருபாலார்க்கும், எல்லாச் சாதியாருக்கும் எவ்வித மதத்தினர்களுக்கும் எங்கெங்கு வைகின்ற நாட்டினர்க்கும், யாவருக்கும், ஒருங்கே உறுதி பயப்பன யாவையோ அவைதாம், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த தெதுவொன்று விளங்குகின்றதோ அத்தனிப் பெரும் பொருளின் திருவுளத்திற்கு இயன்றதா யமையும். எம்முரிமை இது இதுவென ஆராயும் மனதை மறப்போமாயின் அருட்பெருங் கடவுளின் ஆட்சிக்கு அயலாக மாட்டோம். அவ்வருளாட்சிக்கு அயலாயிருப்பார் யாவரும் அடிமைகளே யென்பதை அறியீரோ. அடிமைகள் சென்று அடிமைகளிடத்தில் உரிமைக்கு மன்றாட வேண்டலே வேண்டா!



# காந்திமதி என்னும்
# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(285-வது பக்கத் தொடர்ச்சி)

## 13. பொய் யுறக்கம்.

இரதி பௌர்ணிமியும் இக்கதையில் நிகழும் மக்களைப் பொறுத்தவரையில் காதல் காட்டியும் காதல்வேண்டியும், கொள்ளையிலும் கைப்புண்ணிலும் நகரக்கூட்டத்திலும், மந்திரச்சபையிலும் சதியாலோசனையிலும் தனஞ்சயன் கொலையிலுமாய்க் கழிந்தது. ஏனையர் விருந்தோடருந்தும் விழவுக்களிப்பினில் அவ்விரவைப் போக்கினராதலால் பொழுது விடிந்தும் துயில் நீத்து எழுந்திலர். எனின், கதிரோன் உதித்துச் சிலநேரம் சென்றபிறகே தெருக்களில் போக்குவரவு உண்டாயிற்று. அவ்வூரில் கண்ணியன் என்பான் ஒருவன், கலாநாதனது மனை நோக்கிச் செல்கையில் வீதிவாய் முன்னிரவு மகோதரனால் வெட்டுண்டு முகமும் மார்பும் தரையினைப் புல்லிக் கிடக்கும் தனஞ்சயன் சவத்தைக் கண்டான். கண்டதும் அலமந்து கூக்குரலிட அண்டையயல் சென்றவரனைவரும் அவ்விடம் வந்து கூடினர். கூடினோரைக் கண்ணியன் விளித்து, "இத்திரு நகர்க்குற்ற பெருவிபத்தைக் காண்மின், உத்தமர்காள், இது கிடப்பது கம்மியச் செல்வன் கலாநாதன். கொன்ற இவ்வஞ்சகக் கொலைஞன் பின்புறம் பதுங்கியே இப்பாதகம் இழைத்துளன் பாருங்கள். ஆகா! நமது நடுநாயகம் சிதைவுண்டு இதோ பிதிர்ந்துபோயது, காண்மின்......" எனச் சொல்லி வருகையில் அங்குக் குழுவும் கோபத்தால் கொந்தளித்துக் குமுகுமு வெனக் குமுறியது.

"வாருங்கள், இவனைச் சுமந்து சென்று மடத்துள் வீற்றிருக்கும் எம்மன்னவனுக்குமுன் கிடத்தி, 'மன்னு, நின்குடிகாக்கும் கோன்மை காண்டி' என வினவுவோம் வம்மின்," என்று அக்கூட்டத்திருந்த வொரு வணிகன் கூவினன்.

"ஆம், ஆம், எடுங்கள், பிடியுங்கள்," என்றெல்லோரும் ஆரவாரம் செய்ய, இன்னொரு வணிகன், "நமதரசனோ நல்லன். தாயின் அன்புடையான். ஆயினும் என். கலாநாதனை நம்மூர்வசிப்போன் எவனும் கைநீண்டற்கு ஒவ்வான். பிரபுக்களைச் சேர்ந்தவர்களே மறுபடியும் இப்படுகொலை புரிந்திருத்தலும் வேண்டும். ஆயின், கஜேந்த்ரஸிம்மன் விராடபத்ரன் ஆயினோர் நாம் அரசனிடம் அணுகுதற்கு இடந்தாரொன்பதை மறந்தீர் போலும்!" என்றெடுத்துக் காட்டினன்.

"அரசன் நல்லவன். ஆனால் வீதியிற் செல்வோர் மாண்டு கிடப்பர். அதைக் கண்டிரும்...என்பதுவோ ஆட்சித்திறம். தலைவன் தீயனவிலக்கும் ஆற்றலிலனாயின் யாம் குடியரசு கொண்டாடுவோம் வம்மின், வம்மின்......அடியுங்கள் போய் ஆராய்ச்சிமணியை!" என வினான் அங்கிருந்த கம்மியன் ஒருவன். அந்நகரிலுள்ள பெருமணிகளெல்லாம் பிளிறின. தெருக்கள்தோறும் கலகல்வெனக் குழப்பம் உண்டாயிற்று.

ஆராய்ச்சிமணி இவ்வண்ணம் ஓயாமலடிக்கக் கேட்டு அலமந்து படுக்கையினின்று எழுந்து வெளியோடித் திகைத்தவர்களுள் புரசை வீதியில் கருணாகரர் வீட்டோருமாவர். மணிகளின் ஒலியோடே கலாநாதன் மாண்டனன் என்னும் பொய்யுரையும் தெரு வெங்கும் பரவியது. கருணாகரர் வீட்டினுள் இவ்வதந்தி எட்டினது தனபாக்கியத்தினது காதின் வாயிலாகத்தான், இது வம்புமன்று. அக்கிழவி சிறிது செவிடனாயினும் அவலச்செய்தி யென்றால் அவள் மூக்கு எப்படியும் வியர்த்துவிடும். கொலை, கொள்ளை, விபசாரம், தற்கொலை, பொருளிழவு போன்ற அவ்வூர் வர்த்தமான விஷயங்களை எல்லாம் சரக்குப்பிடிப்பதும் பிறகு அதைக் கூறுகளாக்கிக் கூட்டியும் கலந்தும் குறைத்தும் விற்பதும் ஏவல்தொழிலில் அமர்ந்துள்ளார் எங்கெங்கும் ஆதரித்துக் கையாளும் வியாபாரமாகின்றது. வேலைக்காரி பேசவந்தால் யார் கேட்கின்றார்! அவனே கொலையையும் களவையும்பற்றிச் சொல்லிக்கொண்டு வருவானாயின் வீட்டிலுள்ளோர் விருப்புடன் செவிகொடுக்கின்றனர். அதனால் சிறிது நேரத்திற்காயினும் தான் சொல்வதும் தனக்கு மேலோர் ஏற்பதுமான ஒரு அரிய பெருமை வேலைக்காரர்களுக்குக் கிடைக்கின்றது. நமனிற்குப் பெரியர் வறியர் என்னும் பாகுபாடு இலதாகையால், அவனது செய்கையாம் மரணத்தைப்பற்றிப் பேசும்போது சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் நிலையினது ஏற்றந்தாழ்வு எவ்வளவு இருந்தபோதிலும், அச்சிறு வேளையேனும் கூட்டுறவு கொண்டாடக் கூடியதாகின்றது போலும்.

கலாநாதன் கொலையுண்ட செய்தி தன் காதிற்பட்டதும் படாததுமாய்த் தனபாக்கியம் கருணாகரர் படுத்திருந்த அறைக்குட்சென்று தூசு நீக்குபவளைப்போல் நடித்துப் "பாவம்... இவர்... அவனங்கே செத்துக்கிடக்க இவர் இங்கே ஒன்றுந் தெரியாமல் தூங்குகின்றார்... பாவம்... அடட!" என்று சொல்லிச் சொல்லி புழுதியைத் தட்டினன்.

"என்ன கிழவி, யார்...எங்கே...இன்றைக்குச் செத்துக் கிடப்பது!" என்றார் கருணாகரர்.

"கிழவியாமே, கிழவி. தலையிலோ நல்ல எழுத்தைக் காணோம், என்னைத்தான் வையத்தான் படித்தாரிவர்... செத்தவன் பேரைச் சொன்னால் அப்பொழுது தெரியும் தகப்பனும் பெண்ணும் தவிக்கப்போவது...!"

இதுகேட்ட கருணாகரர் படுக்கையில் எழுந்துட்கார்ந்து "கிழப்பிணமே...அதென்ன ஆராய்ச்சி மணியா!... கிழவி சொல், மாண்டதார்?" என்றனர்.

தனபாக்கியமும் தனது தூண்டிலில் பட்ட மீனைச் சிறிது துள்ளவிட்டுக், "கிழவியாமே கிழவி, நல்லகிழவி. படுக்கையிலிருக்கும் புருஷர்களோடே பேசுகிற கிழவியா நான்...வெகு அழகு..." என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள்.

"தனபாக்கியம்......ஏ, கிழப்பிணமே......ஊமைக் கோட்டானே....தனபாக்கியம்....தனபாக்கியம்......வா இங்கே...என்ன நேர்ந்தது!.....யார் இறந்தது!" எனக் கருணாகரர் இரையவே காந்திமதிக்கு இக்குரல் கேட்டது. அவள் தனது அறையிலிருந்தவாறே "தந்தையே, ஆராய்ச்சிமணி யடிக்கின்றதே! தெருவெங்கணும் ஆரவாரம்! காரணந்தெரியுமோ?" என்று வினவினள். "இதோ போய்த் தெரிந்து வருகின்றேன்...கந்தா, கந்தா, ஏ கந்தா...ஐயோ மறந்தேன். அவன்தான் நேற்றே ஒழிந்தானே!" என்று கருணாகரர் புறப்பட எத்தனிக்கையில் தனபாக்கியம் திரும்பிவந்து, "ஐயா, எனித்தனை பரபரப்பு. என்னைக் கிழவி கிழவி என்று வைததற்குப் பதிலாய் நடந்ததைக் கேட்டிருந்தால்

ஆதியோடந்தமாகச் சொல்லியிருப்பேனே......!" என்றனன்.

" நல்லது, நீ கிழவியல்ல, குமரிதான். செய்தி என்ன சொல் " என்று கேட்டுக்கொண்டே கருணாகரர் அங்கியும் செருப்பும் மாட்டிக்கொள்ள, அவளும், " குமரியாமே, குமரி, அதென்ன குமரி," என்று அவர் வாயிற்படி போகிறவரையில் சும்மாவிருந்து பிறகு பின் தொடர்ந்து, " எனக்குத்தான் தெரியும் என்றேனே, நீர் ஏன் போகவேண்டும்.......சரி, சரி, சொல்லி விடுகின்றேன்...எனக்கென்ன.....செய்தி கெட்டதாயிருந்தால் அப்புறம் என்னைக் கோபிக்க வேண்டா......"

" ஐயயோ, சொல்லித் தொலையேன், சனியனே."

" பார்த்தீர்களா, சொல்வதற்கு முன்னே இப்படித் திட்டினால்.........கண்விழித்ததும் இந்த இழவைச் சொல்வானேன் என்று பார்த்தேன்..."

"என்ன இழவு இது !"

" உங்களுக்கு வலக்கையாயிருந்த உண்மை நண்பனை இழந்தீர்...ஐயோ, காந்திமதியம்மாள் எப்படிப் பொறுப்பளோ இதை !"

" சம்மியனா, கலாநாதனா !"

" அவனே, வருந்தி என்ன செய்வது. மாண்டார் வருவாரோ ! குற்றமும் உங்கள் பேரில்தான் ! பாணச்சியைக் கூட்டிப்போனால்தா னென்ன ! அத்துடன் குடியா முழுகிப் போய்விடும் !"

' அவனே' என்றதும் கருணாகரர் ஒரே குதியாய்க் குதித்துத் தெருவில் ஓடிவிட்டார். " நான்தான் சொன்னேனே, அதுபோதாதா ! இவர் ஏன் ஓடவேண்டும்," என முணுமுணுத்துத் திரும்பினவளுக்கு எதிரில் காந்தி தோன்றி " யார் இறந்தது, தனபாக்கியம் !" என்று படபடக்கும் தன் மார்பை நிறுத்த முயன்றவன் போல் கையால் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

"எத்தனை பேருக்குத் திருப்பித் திருப்பிச் சொல்வது ! ஒன்றாய் வந்திருந்தால் ஒரே பாடாய்ப் போயிருக்காதா !"

" தனபாக்கியம், நான் தவிக்கின்றேனே, தெரியவில்லையா ! யார் சொல் !"

" இராஜாத்தி மாதிரி இருக்கின்றாய். உன்னைப் பார்த்தால் எனக்கு அழுகை அழுகையாக வருகிறது...கலாநாதர்...பாவம்...!"

" கலாநாதரா, என்ன, கலாநாதரா !"

" செத்தார், மாண்டார், இனி வரமாட்டார் !"

" இறந்தாரா, இறந்து போனாரா, போய்விட்டாரா, இறந்து, கலாநாதரா, போயே போய்விட்டாரா ?..." என்று காந்திமதி ஓய்ம்வகை யறியாமல் பன்னினாள்.

" பெண்ணே, பெருங்குன்றத்தவருடன் உன்னப்பன் போக்குவாவு வைத்துக்கொண்டதற்காகப் படவிருக்கும் பாடு இதனோடு போதுமா...நான் வேண்டா வேண்டா என்றால் கேட்டால்தானே !"

"பெரும் குன்றத்தார்! ஆம், பெருங்குன்றத்தார்! கந்தா, அடே கந்தா, ஐயயோ ! முன்னாட்காலை கூறியனெல்லாம் முடித்தாயோடா!" என்று காந்திமதி அரற்றிப் பின், சீ, சி! இராது, அவன் செய்யான்...கலாநாதனும் மாள்வதா...இந்தச் செவிடு என்ன பிதற்றுகின்றதோ!" என இயம்பியவளாய் இவளும் விரைவுடன் வெளியேறிவிட, " என்னவிது! இந்தப் பெண்ணும் குதித்தோடி விட்டதே! நான் சொல்வது யாருக்கும் ஒரு பொருளாகவில்லை...அடுத்த தெரு அம்பட்டனுக்காவது அத்தனையும் சொல்லித் தீர்ப்போம்," என்று அவ்வேலைக்காரி சொல்லிப் போயினள்.

வீட்டினின்று வெளியாகி வேகமாய் நடந்த கருணாகரர் கூட்டம் தொடரும் வழியைத் தொடர்ந்துசென்று தனஞ்சயன் கிடந்த இடத்தைச் சேர்ந்தனர். அச்சமயம் அங்கிருந்த நகரமாக்கள் ஆவேசங்கொண்டு, "வாருங்கள், மணியடித்தும் நம்மரசன் இத்தீங்கை ஆராயப் புகுந்திலன். கத்தி கேடகம் வில் வேல் வாள் அனைத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். முதலில் சென்று கஜேந்த்ரஸிம்மனையும் கபாலனையும் விராடபத்ரனையும் மனையுடன் தீவைத்துக் கொளுத்தி மீள்வோம். போராற்றல் கலாநாதனைக் கரந்து கொன்ற பழியிது அவனோடு ஒருநகர் உறைந்தவர் எவ்வாறு தீர்த்தனர் என்பதைத் தீயே கரியாய் உலகத்தார் அறியட்டும்," என்று ஆர்த்தனர். கூட்டமும் கலைகிற சமயமாயிருந்தது. வந்த கருணாகரரை அங்கிருந்தோர் தழுவி, " ஐய, நேற்றைப்போது மணமகளாய தும் புதல்வி எம்நாட்டுக் கட்டழகி, பொழுதுபுலா விவாகமாவதற்குள் விதவையாய் முடிந்தனளே" எனப் புலம்பினர். இதுகேட்டபின் அங்கிருந்தோர் கோபம் நெய்யூட்டிய தீயெனக் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. இதற்கிடையில் நீதித்தலைவர் தனமித்திரர் அவ்விடம் சேர அவர், கூட்டத்தை விலக்கிக்கொண்டு சவத்தின தருகுசென்று, " இச்சவத்தை எடுமின், காண்போம்," என, எடுக்கமுயன்றவர் முகத்தைத் திருப்பவே, கொலையுண்டவன் கலாநாதன் அல்லன் என்பதும் தையற்கார தனஞ்சயனே என்பதுவும் தெரியவர அக்குழுவின் கோபம் ஒருவாறு தணியலாயிற்று. இதனின்றே அவ்வூரார்க்குத் தனஞ்சயன் மீதிருந்த அன்பு குறைந்ததாகக் கருதலாகாது. படுகொலை யுண்டவன் கலாநாதன் எனும் எண்ணத்தால் பொங்கிய கோபமாகையால் இம்மாறுபாடு அவரது மனத்தைச் சிறிதுபோது திகைக்கச் செய்துவிட்டது. இறந்தது தனஞ்சயன்தான் என்பதை யவர் முதலிலேயே அறிந்திருப்பாராயின் அவர் வருத்தம் சிறிதேனும் குறைந்ததா யிருந்திருக்காதென்பதில் ஐயமில்லை. ஒருவேளை பழிவாங்க அவ்வளவு தீவிரமாய்ப் புகுந்திருக்க மாட்டார்களோ என்னவோ! எதிர்பாரா இச்செய்தி சடிதியில் எட்டிய சிலர்க்குச் சிரிப்பும் வந்தது. வியாகுலத்திற்கும் விகடத்திற்கும் வெகுதூர மில்லையே.

" தனஞ்சயன் செத்ததுகூட நிஜமாயிராது" என்றொருவன்.

" பெண்டாட்டிவந்து ஒரு உருமு உருமினால் இவன் எழுந்துவிடுவது நிச்சயம்," என்றனன் ஒருவன்.

" தனஞ்சயன் வெட்டுண்பதா, என்ன விபரீதம். காலிரண்டு ஓடுவதற்கிருக்கக் கையைநம்பி இவன்யாரையும் அடர்த்திரான்." என்றான் இன்னொருவன்.

" ஐயோ, பாவம், காலிற்கும் கையிற்கும் வித்தியாசம் தேடுவதற்குள் கழுத்தே போய்விட்டது. என்னசெய்வது !" என்று மற்றொருவன் கூறினான்.

" தனஞ்சயனைக் கலாநாதனென்று அயர்ந்தே அப்பாதகன் வதைத்திருக்க வேண்டும் " என்று தனமித்திரர் கருதினர்.

" ஆயின், சந்தர்ப்பம் ஏதேனு மாகுக. தனஞ்சயற்கு இது அரியதொரு உவகை அளித்திருக்கும் என்பது திண்ணம்," என்றனர் கருணாகரரும்.

ஆனால், கலாநாதனுக்குப் பதிலாகவே இவனைக் கொன்றவன் கொன்றனன் என்று அங்கிருந்தோர்க்குச் சந்தேகம் உண்டானவுடன் அந்தக் காலம்பிறழ்ந்த விளையாட்டு வார்த்தைகள் மாறிப் பழைய துன்பமும் கோபமும் மீண்டன. மேற்செய்வ தென்னவெனத் தனமித்திரரை வேண்டினர். அவர் பாவம் அப்பேதை தனஞ்சயன் உடலை எடுத்து அவன்வீட்டிற்கு அனுப்பிவிட்டுக் கருணாகரரையும் அவருடன் சிலரையும் கலாநாதனையும் அழைத்து நகரச்சபாமண்டபத்திற்கு வந்துசேர விதித்துவிடுத்து நோரகத் தானும் ஏனையோரும் அம்மண்டபம் போகப் புறப்பட்டனர்.



தெருக்கண் ஏகிய காந்திமதியின் கருத்து கலாநாதனின் வீட்டின்மேல். கூந்த லவிழ்ந்துதொங்க ஆடை ஒழுங்கற்றுக் கலைந்திருக்கச் சந்திலும் சிறு மறுகிலும் விரைந்து ஒதுங்கும் இந்நங்கையைக் கண்டவர் பெரிதும் வருந்தினரேனும் அவளடைந்ததாக அவர் எண்ணிய அப்பெருந் துக்கத்திற்கஞ்சி யாதும் பேசிலர். முந்திய தன் மனத்தைத் தொடரும் வேகம் கால்களுக்கில்லாது காந்தி உள்ளம் சோர்ந்தனள். எண்ணுதற் கரியதோர் இழவைத்தான் அப்பொழுது அடைந்துளன் என்னும் நினைவு கனவுபோல் தோன்றியதேயன்றித் தன்னை இவ்வாறு இழுத்துச்செல்லும் மனவூக்கம் யாதென்பது அவளுக்குச் செவ்விதில் விளங்கவில்லை. எனினும், தன்மீது எல்லையற்ற காதல் கொண்டவொருவன்—தான் குறைவின்றிக் கொண்டாடப்பெற்ற நற்குணமு முடையவன்—இன்னுயிர் இழந்து கிடக்கின்றானென்பதும், அன்னதற்கு அவளே அடிப்படையா யிருந்திருக்கக் கூடுமென்பதும் அவளது புத்தியில் ஒருவாறு பட்டுப் பட்டு மறைந்தன. " கந்தனுக்குத் தூதுவிடுத்து என் நேற்றுமாலை வரவழைத்தேன். அவன் திண்ணிய ஆட்கள் நால்வர் தன்னுடன் கொணர்ந்தனன். இப் பாவியேன்பால் அவன் காதலுடையன் என்பது வெளியாயிற்று. யான் மறுக்கக் கலாநாதனே குறுக்கிட்டு நிற்கின்றான் என்றுதானே மதித்திருப்பான். அன்றியும் போரிட்டுச் சூளுரைத்து இவன் அகன்றதும் முன்தினமே ! பின் ஏன். கந்தன் குன்றிலிருந்து இறங்கியதும்...கலாநாதன் உயிர் நீத்ததும்...அடதெய்வமே, அத்தனைக்கும் யானேயன்றோ காரணம் !" என்று இன்னவாறு, காகதாலியம் கிடக்கக் காந்திமதி தானே அப்பழியை வகித்ததால்தானோ இச்சமயம் நாடிச் செல்லுமிவன் பாண்மகள் குலாவிய களிமகன் என்பதையும் அவள் மறந்தது !

கலாநாதனது வீடு குறுகினள். கதவைத் தட்டினாள். பதில் வரவில்லை அவன் செத்திலன் என்பதற்கு இது ஒன்றே ஆதாரம் போதும். துன்பம் விளைத்த அசதியாலவள் பகுத்தறிவு பயன் பட்டிலது. " திற...திற... கலாநாதா கதவைத்திற ! உடலூடு இன்னும் உயிர் ஆடுமானால் கபாடம் திறப்பாய்...இப்படிகளின்மீது யான் விழுந்து மடியாதிருக்கவேண்டுமாயின் தாழாமல் திற," எனக் கதறினாள். பொழுது விடிந்தது முதல் அவ்வூரில் ஏதோ ஆரவாரம் உளதென உணர்ந்தானெனினும் கலாநாதன் வெளிப்புறம் வரவில்லை. 'நமக்கென்ன, போனால் என்விதி பூசற்கலாம் ஒன்று தந்தேதீரும்' என்றெண்ணிக் கதவே திறக்காமல், நிகழ்ந்தனவும் தேர விரும்பாமல் வீட்டிற்குள்ளேயே இருந்த அவன் பெண்ணொருத்தி புலம்பக்கேட்டுச் " சரி, என்னைத் தேடியும் வந்துவிட்டதா ! எங்கு எது ஆனாலும் என் காலில் விழுந்தழ என்தான் எல்லாப் பாவிமக்களும் வந்துவிடுகின்றனரோ அறியேன் !" என்று முணுமுணுத்துக்கொண்டே சென்று கதவைத் திறந்தான். திறந்ததும் கொழுகொம்பு படரும் கொடியெனக் காந்திமதி மூர்ச்சையடைந்து நீட்டிய அவன் கரத்தினுள் துவண்டு சாய்ந்தாள்.

எண்ணம் முழுவதும் குடிகொண்டிருந்தவள் காந்திமதியேயாயினும் அவளைத் தன்வீட்டின் வாயிலில் கண்முன் தெரியக்காணச் சிறிதும் எதிர்பார்த்தவனல்லனாதலால் கலாநாதன் உற்றவியப்பிற்கும் உவகைக்கும் அளவில்லை. எனினுமவன் மனநிலை தடுமாறாது அம்மங்கையை உள்ளெடுத்துச் சென்று மயக்கம் தீர்வதற்கானவை முயன்றான். தன்னைத் தாயென வளர்த்த மாதை அழைத்து நீர்துளித்து விசிறி ஆயாசம் நீங்கும் வகை நாட வேண்டினன். அவளது கரங்களை வெப்பம் உண்டாகத் தானே வருடினான். இவ்வாறு செய்யுமளவில் குவிந்திருந்த அவளது விரல்கள் மெள்ள மெள்ள மலர்ந்தன. மலர்ந்த அக்கையைக் கலாநாதன் எடுத்துத் தன் மார்போடணைத்து முத்தம் ஈந்து கண்களில் ஒற்றிக்கொள்ள லாயினான். காந்திமதி இரண்டொருதாம் பெருமூச்செறிந்து சிறிதளவு கண்ணையும் திறந்து தனது கையைப் பரிவுடன் மொய்த்துக்கொண்டிருந்த கலாநாதனைக் கருதிப்பார்த்து மறுபடி அயர்ந்துவிட்டனள். அவன் தன் கையைக் கலாநாதன் பிடியினின்றும் விடுவித்துக் கொள்ளாததற்குக் கண்திறந்த போதிலும் அவளுக்குத் தன்னுணர்வு முழுவதும் வந்திலதென்பதே சமாதானமாகும். எனினும், ஓரம்சாரா மனம்கொண்டு அவளது மெய்நிலையை ஆராய்வோர், அதேசமயத்தில், அமர்ந்து உயிர்த்தனளென்பதும், வெளுப்புமாறி முகம் இயற்கைநிறம் காட்டிய தென்பதையும், கண்ணிமை துடித்தன வென்பதையும் கண்டவருமாவர்.

அகத்தினுள் இவ்விதம் நடைபெறப் புறத்தில் பலர் கூடிக் கதவைத் தடதடவென் றிடித்தனர். கலாநாதனோ இருந்த இடம்விட்டு நகரவேயில்லை. தட்டியவர் யாவராயினும் கையோய்ந்து தாமே போய்விடட்டுமென்றிருந்தான். வெளிநின்றவர் பதில் பெறாதது கண்டு, 'கலாநாதா, சம்மியா, நாதா போர்வல்லோனே, திறல்வீரா,' என்று கோவிலில் ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்வதுபோல் பலவாறு பேரிட்டழைத்தனர். பின்னும் பதில் இல்லை. இவர்களுக்குக் கடுங்கோபம் மூண்டது. போற்றிப் போற்றிக் கேட்டும் கொடாதானை வாயில்வந்தவாறு தூற்றித் தூற்றித் திரும்பும் தென்னாட்டுப் பாவலரேபோல் வசைமாலை தொடுக்க வாரம்பித்தனர். இவ்வசையைச் சகியாது கலாநாதன் காந்தியி னருகுநின்று எழமுயன்றனன். இப்பொழுதுதான் முழுநினைவும் அவளுக்கு வந்ததுபோலும் ; காந்திமதி தனது மற்றக் கையைக் கலாநாதன் தோள்மீதுவைத்து நிறுத்தி மெல்லியகுரலில், " அய்ய, செல்லல். இங்ஙனே இருத்தி ...என்வயின் இருத்தி...புறத்துளோர் கருதிய கருமம் கொடியதுபோலும்...." என உருக்கமாய் இயம்பினள். காந்தியின் வாய்வந்த இது ஆணையோ வேண்டுகோளோ அல்லது காதல் நெகிழ்த்திய ஆர்வமேதானோ என ஓராது கலங்கிய தன் மனதை ஒருதுறை நினைக்கும் வண்ணம் நிறுத்துதற் கமைந்த கலாநாதன், தனக்குச் செவியொன்று உளதென்று சிறிதேனும் சிந்தித்திலன். தட்டிய பேரொலி நமன்மடி துஞ்சியோரையும் எழுப்புதற்கொத்ததெனினும் வீட்டின் கதவும் உடையோன் காதும் திறந்தபாடில்லை. மனையுள் நிகழ்வதான இத்துண்ணிய நிகழ்ச்சியைத் தெருநின்றோர் அறிந்தவரல்லரே. அவர்பால் கிளர்ந்த வெகுளி புரண்டோடிக் கதவையே தகர்க்கத் தலைப்பட்டது. " மாண்டவன் தனஞ்சயனல்லன், கலாநாதனே ; நாமங்கு முதல் எண்ணியதே உண்மை, பின் கண்டது தவறு," என விளம்பினன் அவர்களுள் ஒருவன். " வாருங்கள், உடைத்துத் தள்ளுங்கள் இக்கதவை, பின் வந்தது வரட்டும்...இவன் நம்மை இந்நாள் இப்படி நிந்திப்பதேன் ?" என முட்டி

குலுக்கிப் புகன்றான் மற்றொருவன். அனைவரும் இதற்குச் சம்மதித்தனர். இந்தச் சமயத்தில், "ஐயன்மீர், என்னிற் துணிவது கருமம். கலாநாதன் நுழையுள் வலிந்து புகுவோர் தத்தம் தோளுடன் புகலாம். ஆனால் திரும்பித்தான் எவ்விதம் வருவரென்பது தாமதித்துக் காணவேண்டும். துந்துபி முன்னாள் கிட்கிந்தையில் இறங்கிய செவ்வி மறவீர். உங்கள் கம்பீரமெல்லாம் கங்காளமாயுடையும்," எனத் தெழித்தவராய்க் கருணாகரர் தங்குச் செறிந்த மாக்களை விலக்கி வந்தார். கருணாகரரது குரல்கேட்டளவில் உட்புறம் இருந்த கலாநாதனது வளர்த்ததாய் அவனது அநுமதியின்றியே கதவைத் திறந்துவிட்டனள். மற்றவர்களைப் புறமே நிற்க விதித்திட்டுக் கருணாகரர் உட்சென்று மேன்மாடி ஏறிப்புக, அன்றவர் அக்களந்தனில் கண்டதாம் காட்சியே காட்சி! கலாநாதனை மெள்ளத் தன் இருகரங்களாலும் தள்ளி, நாணத்தால் மெய்யெங்கும் சிவப்போடப் பள்ளிநின்று சடிதியில் குதித்தெழுந்தாள் காந்திமதி. காதலனோ கால் தடுமாறி யொதுங்கினான் ஒருபக்கம். மருண்ட சிந்தையராய் மூவரும் திகைத்தனர். வளர்த்தவள் மாத்திரம் அடக்கமாட்டாமல் 'கொல்' என்று சிரித்துவிட்டாள். மருட்சிமாறி முதல் முதல் அச்சிரிப்புடன் கலந்தது கருணாகரரே. "அடவட, ஆச்சரியம் இவ்வுலகம். இன்று காலையில் துயிலெழுந்ததும் இனி என் ஆயுள் வரையில் சிரிப்பென்பதே அற்றதென் றெண்ணினேன். இவ்விடமோ விலா இறச் சிரித்தற் கொத்த நிகழ்ச்சி காண்கிறேன். கலாநாதன் செத்தானென இவ்வூர் மணிகளெல்லாம் ஒன்றாய் அடிக்க ஈங்கிவன் ஆயிரம் உயிரை விழுங்கி வளர்கின்றான். பாண்மிழற்றும் ஒரு மகளைப் பழித்துரைத்த என் புதல்வி நாணகழன்ற நன்மகளாய் நேயமொடு நோக்குகின்றாள்..."எனவியக்கும் தன் தந்தையின் வாய்புதைத்து, "எந்தாய், நட்பெனும் நலத்தினால் யானிழைத்த இச்செய்கைக்கு ஒவ்வா ஒருபொருள் விளம்பவேண்டா.........நிறை மாட்சி வழுவிய நினைப்பன்று......இவ்விடம் நான் போந்ததன் காரணம் என்னெனின்........."எனக் காரணம் உரைக்கப்புகுந்த காந்திமதியின் உரைதடுத்துக் கருணாகரர், "என்னெனின்.......என்னெனின் .. .........பிணக்கோலம் காணவந்தாய், மற்றுமணக்கோலம் கொண்டுமீள்வாய்.........வேறென்......... மகளே, சொல்வதைக்கேள், இனியேனும் நீ அன்னை வயிற்றிற் பிறந்த வொரு பெண்ணென்பதை மறவாதே. நீ பேயல்லள்......என்ன ! என் செல்வமே அழுகின்றனை ! பாண்மகளை நினைத்தோ !" என்று கூறினர். கலாநாதனுக்கு இதுகாறும் தன்னகந்தனில் பாண்மகள் ஒருத்தி புகுந்தனள் என்னும் ஞாபகமே இல்லை. ஆதலால் இப்பொழுது, "கருணாகரரே, அதுபற்றி யானுரைப்பதைக் கேட்பீர். இப்பூமடந்தை சான்றாய் நான் அப்பாணச்சியைச் சிந்தித்தும்......" என்று தனது பாரத்தைநீக்க முயன்றபோது வெளிப்புறம் காத்திருந்தவர் ஆத்திரம்கொண்டு, "ஆள் விழுங்கியடா இவ்வீடு, கூப்பிடச்சென்ற கருணாகரரையு மல்லவோ காணோம்," என இரைத்துக், 'கருணாகரரே, ஐயா, கருணாகரரே; என்று ஓயாது கூவினர். இதுகேட்ட கருணாகரர், "நல்லது, கலாநாதா, நாமிப்பொழுது பொதுமண்டபம் போகவேண்டும். இந்நகரெல்லாம் பெருங்குழப்பமாயிருக்கின்றது. நாம் வரும் வரையில் காந்தி இம்மனையிலேயே தங்கியிருப்பாள். பிறகு நீயும் நானுமாய் இவளை அழைத்துச் செல்வோம். அப்பொழுது நம்மைக் குறுக்கிட்டு எவன் புகத்துணிகின்றான் பார்ப்போம் ஒருகை!" என்று சொல்லி யவன் கையைப்பிடித் தழைத்தார். காந்திமதி இளநகை யரும்பி, "ஐய, நீர் தனஞ்சயனது உத்தியோகத்தை இதில் வகிப்பவராவீர். அவனல்லனோ நம் கலாநாதருடன் பேருக்கும் போருக்கும் தன்னை இணையென்று கொண்டாடிக் கொள்வன் !" என மொழிந்தனள். கருணாகரரது முகம் வாட்டமடைந்தது. "மகளே, நீ பேசிய இச்சொல் தீப்போல் என்னைச் சுடுகின்றது.....என்செய்வாய் ..நடந்தது அறியாய் நீ," என வருந்திக் கலாநாதனுடன் அம்மனைநின்று அகன்றனர். 'பாண்மகளையும் காந்திமதியையும் ஒரே கூரையின் கீழ் விட்டுவர வேண்டி நேர்ந்ததே' என்று கலாநாதன் ஏங்கினானெனினும், 'ஐயமேதேனும் உளதாயின் அதை அவன் தூயமனமும் களங்கமற்ற முகமுமே தெளிய வைக்கும்' எனத் தேறினான். தனஞ்சயனுக்கு உற்ற கதியை வழியில் கருணாகரர் கலாநாதனுக்குக் கூறித் தாமிருவரும் முன்னாள் அவனைக் கடிந்ததெல்லாம் எண்ணி மிக வருந்தினராய்ப் பொதுமண்டபத்தைச் சேர்ந்தனர்.

T. N. சேஷாசலம்.

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

### அன்பு ஆராய்ச்சி.

#### அன்பே அகம்.

இன்ப அன்பு :—இத்துணையுங் கூறியதால் அன்பினை உவகைச் சுவைபடச் சேக்கிழார் செவ்வையாகப் புனைந்துரைக்கின்றார் என்பதாயிற்று. உவகைச் சுவையினை முன்னரே விரித்துரைத்தோம். இனி அன்பாவது என்னை? ஒருவகையால் நோக்குமிடத்து உவகை அல்லது இன்பமே அன்பின் உருவமாகும். யாம் எவரிடத்து அன்பு பாராட்டுகின்றோமோ அவரை நோக்க அவ்வுள்ள நிலை அன்பெனப் பெயர் பெறுகின்றது. எம்மை நோக்க அவ்வுள்ள நிலையே இன்பெனப் பெயர் பெறுகின்றது. அன்பு இன்பு, என்பவற்றிலுள்ள அகர இகரங்கள் அவன், இவன் என்பதிற்போலச் சுட்டெழுத்துக்கள் அல்ல; அல்லவாயினும் அவற்றிற்கு அச் சுட்டுப் பொருள்பட வேடிக்கையாக ஓர் உரை கூறலாம். அகரம் சேய்மைச் சுட்டாதலின் அன்பு என்பது தனக்குப் புறத்தாரைப் பற்றியது எனலாம்; இகரம் அண்மைச் சுட்டாதலினாலும் தன்னினும் தனக்கு அண்மையில் உள்ளார் இல்லை ஆதலினாலும், தனது உள்ள நிலையைப்பற்றியதெனலாம். உள்ளநிலை என்னமோ ஒன்றுதான். நோக்க வேறுபாட்டால் வெவ்வேறு பெயர் பெறுகின்றது. ஆகவே இன்பமும் அன்பும் ஒன்றேதான். தெய்வச் சேக்கிழாரும் "முடிவிலா இன்பமான அன்பு" என்று இக்கதையிலேயே எழுதியுள்ளார். பின்னும் "இன்ப அன்பு" எனக் காரைக்கால் அம்மையார் வாயில் வைத்துக் கூறுவார்.

அன்புச்சுவை :—அன்பும் உவகையும் ஒன்றேயாயின் முன்செய்த சுவைஆராய்ச்சி ஒருவகையில் பயனுடையதேயாகும். சுவையாராய்ச்சி அன்பாராய்ச்சிக்குப் பக்கத்துணையாகி நிற்பதுபற்றி அதனை முன்னர்ச் செய்ய வேண்டியதாயிற்று. தொல்காப்பியனாரும் பொருளாராயவந்தார் பின்னே மெய்ப்பாட்டியல் ஒன்று கூறவில்லையா? இனி அன்பினைச் சுவையறிந்து ஆரத் துய்ப்போமாக.



தமிழ் அன்பு —அன்பாராய்ச்சி, தமிழிற்கே உரியது. அன்பு என்ற அருந்தமிழ்ச் சொல்லை மொழிபெயர்க்கவே முடியாது. அது தமிழின் உயிர்நிலையாயதோர் அருமைத் திருமொழி. அன்பு என்ற சிறிய சொல் தமிழர் கண்ட உயரிய கொள்கைகளை எல்லாம் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு ஒளிர்கின்றது. அதன் உண்மைப் பொருளை உணர்ந்தார் இறையனாரும், ஆண்டாளும், வள்ளுவனாரும் மணிவாசகனாரும், நக்கீரரும், நம்மாழ்வாரும், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஆகிய தெய்வப் புலவர்களே ஆவர். அவர்கள் விரித்துரைத்த அன்பினையே சேக்கிழாரும் வேறொரு வகையால் ஓவியம் எழுதிக் காட்டுகின்றார். அதனாலன்றோ அவரையும் தெய்வப் புலவர் என்பது.

சேக்கிழார் பெருமான் பாடியருளிய திருக்கண்ணப்பரது தெய்வத் தமிழ்க்கதை, அப்புலவர் பெருமானுக்கு முன்னர் என்ன என்ன வேறுபாடுகளோடு வழங்கிவந்ததென்பதனைச் சுவையாராய்ச்சியில் கண்டறிந்தோம். கண்ணப்பரது கதைக்கும் வாயிருந்தால் அதுவும், மணிவாசகரைப்போலப்

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்று பாடி நிற்கும். கண்ணப்பர் கதையும், கல்லாயும் புல்லாயும் மரமாயும் மக்களாயும், புலவரிடத்தே மாறி மாறிப் பிறந்து கடைசியாகக் கடவுளாக மாறி நமது செல்வச் சேக்கிழாரின் திருவாய்மலரில் திருவவதாரம் செய்து திருவருட் பெருக்காக உலகில் உலவி வருவதனையும் முன்னர்க் கண்டோம். அங்ஙனமே, மற்றொன்றும் கண்டறிய வேண்டும். சேக்கிழார் தமது கடவுள் தன்மையால் கடைந்துவைத்த அன்புப்பிழம்பாகிய மணிவிளக்கு இவருக்கு முன்னர் எவ்வாறு எரிந்து வந்தது. இவர் புத்தம் புதிதாகச் செய்த வேலைப்பாடென்ன? அவ்விலை உயர்ந்த அரவின் மணியினை (மாணிக்கத்தினை) இவர் எவ்வாறு சாணைபிடித்துத் "தக தக" எனக் கொழுந்து விட்டெரியச் செய்தார். எத்தனை பட்டை தீற்றி மின்னலைப்போல மின்னிப் பொலியச் செய்தார்? இவற்றினை எல்லாம், அன்பு ஆராய்ச்சி வழியாகச் சென்று கண்டறிதல் வேண்டும். அப்போதுதான் சேக்கிழார் பெருமானின் பெருமையும் புதுமையும் தெரியவரும்.

அன்பும் பக்தியும்:—அன்பு என்னும் அருஞ்சொல், தமிழ் என்பதொன்றே யல்ல. கண்ணப்பர் கதையே தமிழ்க்கதை. கண்ணப்பர் பிறந்த வேடர்குடி பழந்தமிழ்க் குடியாகும். கண்ணப்பனாரைச் சேக்கிழாரும் செந்தமிழ் நாட்டுச் செல்வப்பிள்ளையாகவே சிறப்பித்துப் பேசுகின்றார். கண்ணப்பனார் கதை, ஓர் தமிழ்ப் பெருமகனாரது வரலாறு என்பதொன்றே யல்ல. கண்ணப்பரது அன்பே தமிழ் அன்பு. அவர் ஒழுக்கமே தனிப்பெருந் தமிழொழுக்கம். அவ்வன்போ "பக்தி" என்று பொதுவாக வழங்கிவருவதற்கு ஒருவகையில் முற்றும் மாறுபட்டதெனலாம். சிவகோசரியாரது பக்தி—கண்ணப்பனாரது அன்பு—இவ்விரண்டினையும் ஒத்துநோக்கின் இவற்றின் ஒற்றுமை வேற்றுமை இனிதின் விளங்கும். நாலுபேர் சென்றதால் நன்றாகத் தேய்ந்த வழியில் நடந்து செல்வது பக்தி. அன்பிற்கோ தேய்ந்த வழி யென்றும் பழகிய வழி என்றும் இல்லை. கண்டதெல்லாம் வழிதான். காடுமேடெல்லாம் தவிடு பொடிதான். காற்றில் பறப்பார்க்குக் காடென்ன? மேடென்ன? அன்பிற்கு வழியும் இல்லை, வாய்க்காலும் இல்லை; அணையும் இல்லை அளவும் இல்லை. அறிஞர்களும் அறிவு நூல்களும் இட்ட வேலிக்குள் இருந்து வாழ்வது முன்னது. பின்னதோ வானம்போல் வரம்பற்றது; வரையறையற்றது. அது கொழுகொம்பிற் படரும் கொடி; இது அடர்ந்திருண்டதொரு பெருங்காடு. அது ஓர் சிறிய நீர்க் கால்வாய், இது கங்குகரை யற்றதொரு பெருங்கடல். சுருங்கச் சொல்லுமிடத்து அது கட்டுப்பட்டுக் குட்டுப்படுவது; இது எங்கேனும் இன்பத்துடன் எழுந்து பறப்பது. அன்போ அறிவு நூல்களின் எல்லைக்குட் பட்டதல்ல, எத்தனை முறை குட்டிக்கொள்வது; குந்திக் குந்தி எழுவது, சுற்றிச் சுற்றி வலம் வருவது, சோற்றை எவ்வண்ணம் குழைப்பது, நீரை எவ்வண்ணம் குடிப்பது, என்று இவற்றை எல்லாம் ஆய்வது அன்பின் முறையல்ல. நூல்களும் அன்பின் எல்லையை வரையிட்டுக் கூறுவதில்லை. கடலுக்குக் கரையிடவல்லார் யார். அன்பு நிலையில் செய்யத் தகுவது இது என்றும் செய்யத் தகாதது இது என்றும் இயம்புதற்கில்லை. இவ்வாறிரு எனச் சிறையிடுவார் இல்லை. இதைச் செய்யாதே என விலங்கிடுவார் இல்லை. இதைச் சொல்லாதே என வாயை மூடுவாரும் இல்லை. உலைவாயை மூடலாம்; ஊர் வாயை மூடினாலும் மூடலாம். ஊழிக்காலத்து எரிமலையின் வாயைமூட வல்லார் யார்? காற்று மழையும் கலந்தடிக்கும் கடையூழிக் காலத்திலே கடல் பொங்கி வழியுமானால் அதனை அணையிட்டு அடைத்துத் தடுப்பார் யார்? எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு புரண்டோடுகின்றது இவ்வன்பு. நூலோர் இட்ட வேலியும், நாலுபேர் போனவழியும் வெள்ளக்காடாய் மறைந்தொழிகின்றன.

பொருட்பாகுபாடு :— இவ்வன்பாராய்ச்சியினைத் தமிழர்கள் பொருளாராய்ச்சியின்பாற் படுத்தினர். பொருளாவது நூல்கள் கூறும் கருத்துக்கள். நூல்கள் எடுத்துக் கூறும் பொருள்களை எல்லாம் அகம் புறம் என்ற இரண்டு பாகுபாட்டிலேயே அப்பழந் தமிழர்கள் அடக்கிவிட்டார்கள். அகம் என்றால் உள் என்பது பொருள். புறம் என்றால் வெளி என்று பொருள். தானுணர்ந்த ஒழுக்கத்தினை இன்னொருவனுக்கு இவ்வாறிருந்ததென எடுத்துச் சொல்ல இயலாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே துய்க்கப் படுவதாய் நின்ற ஒழுக்கத்தினைக் கூறுவது ஒருவகைப் பொருள். இஃது, உள்ளுக் குள்ளேயே கசிந்து கசிந்து உருகுவது; புறத்தாருக்குப் புலனாகாதது. உள்ளுக்குள்ளேயே உணரப் படுதலினாலே இதனை உள் ஒழுக்கம் என்றனர், அக ஒழுக்கமென்று பெயரிட்டனர். அகப் பொருள் என்று பாகுபடுத்தினர். அவ்வாறன்றி வெளியார் எல்லார்க்கும் விளங்கக் கூடியதாய், வெளியார்க்கு வெளியிடக் கூடியதாய் விரிந்து கிடப்பது வேறொன்று. வெளிக்குப் புலனாகி வெளியில் விளைதலால் இதனை வெளி ஒழுக்கம் என்றனர். புறவொழுக்கம் எனப் பெயரிட்டனர். புறப்பொருள் எனப் பாகு படுத்தினர். காதலனும் காதலியும் கலந்து நுகரும் இன்பம் அகவொழுக்கமாகும். போர்புரிந்து புகழ் பெறுவதோ புற ஒழுக்கமாகும்.

அகமும் அன்பும் :—ஒத்த அன்பினர் துய்க்கும் இன்பம் ஒன்றினையே பழந்தமிழ் நூல்கள் அகவொழுக்கம் எனச் சிறப்பித்து ஓதுகின்றன. எனினும் காதற் பாட்டுக்கள் எல்லாம் அகப்பாட்டுக்கள் ஆகமாட்டா. அன்பு என்று தமிழர் கூறுவது எங்கு உண்டோ அங்குத்தான் அக ஒழுக்கம் உள்ளதாக அவ்வுயரிய தமிழர்கள் தமது உள்ளத்தால் கண்டுகொண்டனர். இன்னுமுள்ள இடங்களில் இணைபிரியாத காதல் இருப்பினும் அதனைப் புறமென்றும் அகப்புறமென்றும் கொண்டு, முல்லைப் பொதுவியல், கைக்கிளை பெருந்திணை எனப் பாகுபடுத்தி அன்பினைந்திணை என்னும் அகவொழுக்கத்தின் நின்றும் வேறு பிரித்தனர். ஆகவே, காதல் பாட்டுக்களை எல்லாம் அகத்திணை என்று அத்தமிழர்கள் அருமை பாராட்டியதாகக் கொள்ளுதல் கூடாது. அவர்கள் அனைவரும் காதலால் கண்மூடிய கடையர்கள் என்று கருதி விடுதலும் ஆகாது.

காதற்பாட்டோ :—பொய்யடிமை யில்லாத புலவர்கள் என்று போற்றப்பட்ட சங்கப்புலவர்கள் பாடிய நூல் பல அகப்பொருள் பற்றியவாய் விளங்குவதனை நாம் நுணுகி ஆராய்தல் வேண்டும். அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறு நூறு, பரிபாடல் என்ற தொகைநூல்கள் எல்லாம் அகப்பொருள்தானே. பதினெண் கீழ்க்கணக்கிலும் பலநூல்கள் அகப்பாட்டாய் அமைந்தவைதானே. ஐந்திணை என்ற ஐந்திணை ஐம்பதும் திணை எழுபதும், திணைமாலை நூற்றைம்பதும் திணைமொழி ஐம்பதும், இன்னிலையும், திருக்குறளோடு ஒன்றாக வைத்து எண்ணப் பெற்றன அன்றோ? திருவள்ளுவனாரும் காமத்துப் பாலில் இவ்வக ஒழுக்கத்தினைத்தானே எடுத்துப் பேசுகின்றார். காதல் என்பதைக் கனவிலும் கருதாத அறவண அடிகளும், தமது நாலடியாரைத் துறவு முதலாகப் பாடத் தொடங்கிக் கடையில் காமத்துப் பாலைக் கூறித்தானே முடிவு கட்டினார்கள். திருவாதவூரடிகளது திருக்கோவையும் நம்மாழ்வாரது திருவாய்மொழியும் அகப்பொருள் நிரம்பிய கோவைகள் அன்றோ? இன்னும் இறையனார் அகப்பொருள் என்பது ஏன் எழுந்ததென எண்ணிப் பார்த்தல்வேண்டும். முன்னொரு காலத்திலே பாண்டியன் ஒருவன் அஃதஃதில் சிறந்த அறிஞர்கள் பலரையும் தன்னூரில் குடியேறிவாழ வரவழைத்தான். எல்லோரும் வந்தனர். ஆனால் எங்கே போய்த் தேடினாலும் பொருளறிந்த புலவர்களைக் காணக் கூடவில்லை. அரசன் அழுது புரண்டான். ஆண்டவனை வேண்டினான். அரசனது துயரம் அறிவின் பாலதாதலினாலே இறைவன் தானே தன் கைப்பட ஓர் அகப்பொருள் எழுதி யருளினான். அரசன் அழுவானேன்? இறைவன் இரங்கி அருளுவானேன்? இறையனார் அகப்பொருளை எழுதுவானேன்? இக்கதை உண்மையாய் உலவினும் உலவுக; பொய்யேயாய்ப் போயினும் போக. அகப்பொருள் ஆராய்ச்சி அருமையானதென இறைவனும் எண்ணத் தகுந்தது என்பதனை இக்கதை விளக்குகின்றது. இத்துணை உயர்வாக எண்ணப்பட்ட அகப்பாட்டு வெறுங்காதற் கதையாகுமா? இப்பெரியோர்களும் இவர்களது இறைவனும், காதற் பாட்டுப் பாடிக் கண்மூடிக் கொள்ளுவார்களா? இவ்வுலகிற்கு வழிகாட்டிகள் இவர்களே அன்றோ? இவ்வாறானால் இவர்கள் ஏன் இக்காதற் பாடல்களை இங்ஙனம் பாடியுள்ளார்கள்? அன்பு என்பதன் பொருளினை உணர்வோமானால் இந்த உளவும் தெரியவரும்; இப்பாடல்களை இப்பெரியோர்கள் இந்த உலகத்திற்கு ஒரு எளிய வழியைக் காட்டவேண்டி இயற்றி அருளினார்கள் என்பதும் இனிது விளங்கும்.

அன்பே தமிழர் கண்ட உண்மை என்றோம். மற்றொன்று விரித்து இதனை விளக்கவேண்டியிருக்கின்றது.

டி. பி. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 16.

## நள வெண்பா

(291-வது பக்கத் தொடர்ச்சி)

### சுயம்வர காண்டம்.

இசைமுகந்த வாயு மியமெறிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னாடு போந்திருந்தாற் போன்றதே போர் [விதர்ப்ப
நன்னாடர் கோமா னகர். 69.

தேவர் பணியேற்றுப் புறப்பட்ட நளன் தமயந்தி வாழும் குண்டினபுரம் போய்ச் சேர்ந்தான்.

தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது. 70.

பதப்பிரிவு:—தேன் குவளை தன்னிலே செம் தாமரை மலர பூ குவளை தாமரைக்கே பூத்தது. ஆங்கு மது நோக்கும் தாரானும் வான் நுதலும் தம்மில் பொது நோக்கு எதிர் நோக்கும் போது.

அன்வயம் :—ஆங்கு, மது நோக்கும் தாரானும் வான் நுதலும் தம்மில் பொது நோக்கு எதிர் நோக்கும் போது, தேன் குவளை தன்னிலே செந்தாமரை மலரப் பூங்குவளை தாமரைக்கே பூத்தது.

பதவுரை.

ஆங்கு - அக்குண்டினபுரத்துக் கன்னிமாடத்தில்,
மது - வண்டுகள்
நோக்கும் - பார்த்து வருகின்ற
தாரானும் - மாலையை அணிந்த நளனும்,
வான் - ஒளிபொருந்திய
நுதலும் - நெற்றியையுடைய தமயந்தியும்,
தம்மில் - தங்களுக்குள்
பொது - பொதுவாக
நோக்கு - பார்வை பார்த்துப் பிறகு
எதிர் - ஒருவரையொருவர் நோக
நோக்கும்போது - நோக்கிய சமயத்தில்,
தேன் - மதுரமாகிய
குவளைதன்னில் - குவளைமலர்போன்ற தமயந்தியின் கண்களில்
செம் - சிவந்த
தாமரை - தாமரைபோன்ற நளனுடைய கண்கள்
மலர - மலர (பின்னும்)



பூ - அழகிய
குவளை - குவளைபோன்ற அவள் கண்கள்
தாமரைக்கே - தாமரைபோன்ற அவனது கண்களிலே
பூத்ததே - மலர்ந்தன.

கருத்து :—தமயந்தியும் நளனும் எதிரெதிர் நோக்கிய போது, அவன் கண்ணின் பிரதிபிம்பம் இவள் கண்களிற்குள்ளும், மறுபடி இவள் கண்ணின் பிரதிபிம்பம் அவன் கண்களிற்குள்ளும் தோன்றின.

விரிவுரை :—நளனும் தமயந்தியும் இப்பொழுது சந்திக்கின்றனர். இடமும் கன்னிமாடத்தைச் சூழ்ந்த நந்தவனமா யிருத்தல்வேண்டும். இந்திரன் தந்த மந்திரத்தால் காவலர் காணாமல் நளன் அங்குவர முடிந்தது. வந்ததும், நளன் தமயந்தியைக் கண்ணுற்றான். தமயந்தியும் அவனைக் கண்ணுற்றாள். ஆனால், அறிமுகமில்லாத இருவர் ஒருவரை ஒருவர் எதிராக நோக்குவதற்கு நாணிப் பொதுவாக எல்லாவற்றையும் பார்ப்பதுபோல் சேர்த்துப் பார்த்திருப்பர். இது பொதுநோக்கு. பிறகு அவள் தன்னைப் பார்க்காதபோது இவன் அவளை உற்று நோக்குவான். அவளும் அவ்வாறே. இப்படிச் சிறிது நேரம் கண்களவு ஆடியபின் இருவர் கண்ணும் பார்வையில் சந்திக்கநேரும். இதுவே எதிர்நோக்கு. ஒருவரழகை ஒருவர் கண்டு அவரவர் கண்கள் மலர்வதாயின. அந்நிகழ்ச்சியைத்தான் புகழேந்தி இங்குக் குவளை தாமரையினுள் மலர்வதும், அத்தாமரை மீண்டும் குவளையுள் மலர்வதாகவும் கூறினார்.

தாமரை குவளைக்குள்ளும் குவளை தாமரைக்குள்ளும் பூத்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறிருந்தது நளனும் தமயந்தியும் எதிரெதிர் தம் கண்களால் பார்த்துக் கொண்டது. இதைப்போல் அது இருந்தது என வருதலால் இது உவமையணி. (30வது பக்கம் பார்க்க.) பொருளுக்குப் பொருளையும், நிலைக்கு நிலையையும், செய்கைக்குச் செய்கையையும் உபமானமாகக் காட்டலாம். கல்லைப் போல் திரண்டதோள்; பெரியோர் மனமெனத் தெளிந்த குளம்; யானைமீது பாயும் சிங்கத்தைப்போல் அவன் பகைவன் மீது பாய்ந்தான், என்பன முறையே இவ்வித உவமைகளுக்கு உதாரணம். இங்கு, இவ்வுதாரணங்களிலெல்லாம் இருக்கின்ற ஒரு பொருளையோ நிலையையோ அல்லது செயலையோ தான் உபமானமாகக் கொண்டிருக்கிறோம். ஆனால், கவிகள் இல்லாதவைகளையும் சிற்சில சமயம் உபமானமாகக் கூறுவார். தாமரை மலர்களைப் பூத்திருக்கின்ற மேகம்போல் திருமால் தோன்றினார் என்னுங்கால், தாமரை பூக்கின்ற மேகம் இல்லாதிருந்தும், அப்படியொன்று இருக்கிறதென்று வைத்துக்கொண்டு, அந்த மேகத்தைக் கண்கள் கை நாபி பாதம் ஆகிய இவை கமலங்கள் என்ன மலர்ந்திருக்கின்ற நீலநிறமான திருமாலின் தோற்றத்திற்கு உபமானமாகக் கூறலாம். இல்லாத வொன்றை அது இருக்குமாயின் பொருந்தும் என்னும் கருத்தில் உவமையாகக் கொள்கின்றபடியால் அதற்கு இல்பொருள் உவமையணி என்று பெயர். எலி எலாம் சூழ்ந்து ஒரு பூனையை வளைத்துக்கொள்வதுபோல் பீமசேனனைப் பகைவர் சூழ்ந்துகொண்டார், என்று இயம்புவதும் இல்பொருள் உவமையணியே. எலிகள் ஒருபோதும் பூனையை வளைத்துக்கொள்ள நேரிடாது. அப்படி நேரிடுமாயின் அப்பூனை எவ்வளவு நிர்ப்பயமாய் நின்று எலிகளை வெல்லுமோ அவ்வாறே பீமசேனனும் தன் பகைவரை யஞ்சாது வென்றான், என்பது இதன் பொருள்.

ஒரு பூ இன்னொரு பூவிற்குள் போய் மலர்வது ஒரு நாளுமில்லை. அப்படி மலருமாயின் அது நளன் கண்ணும் தமயந்தியின் கண்ணும் ஒன்றின் பார்வை மற்றதிற் படப் பார்த்ததை நிகர்க்கும், என்றபடியால் இதுவும் இல்பொருள் உவமையாயிற்று. இந்த அணிக்குச் சமஸ்கிருதத்தில் அபூத வுவமை எனப் பெயர்.

குறிப்பு :—1. குவளை, தாமரை என்பன இங்கு அவை போன்ற கண்ணை யுணர்த்தியபடியால் அவை உவமை யாகுபெயர். (உவமை யாகுபெயர் வேறு, உவமையணி வேறு.)

2. வான் நுதல், என்பதற்கு ஒளி பொருந்திய நெற்றி, என்பது மட்டுமே அர்த்தமாயிருந்தாலும், அதை உடைய தமயந்தியை இத்தொடர் காட்டுவதால், முன் 41-வது செய்யுளில் பொற்றொடி என்றது போல், இதுவும் அன்மொழித் தொகை.

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே— பூண்டதோர்
அற்பின்றாழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்றாழ் வீழ்த்த கதவு. 71.

பதப்பிரிவு:—நீண்ட கமலத்தை நீலம் கடை சென்று தீண்டும் அளவில் திறந்ததே பூண்டது ஓர் அன்பின் தாழ் கூந்தலாள் வேட்கை அகத்து அடக்கி கற்பின் தாழ் வீழ்த்த கதவு.

அன்வயம் :—தாழ் கூந்தலாள் வேட்கை அகத்து அடக்கி கற்பின் தாழ் வீழ்த்த கதவு, நீண்ட கமலத்தை நீலக்கடை சென்று தீண்டும் அளவில், பூண்டது ஓர் அன்பின் திறந்தது.

கருத்து :—தமயந்தியின் கடைக்கண் பார்வைபட்டதும் நளனினுடைய நிறை சிறிது தளர்ந்துபோயது.

பதவுரை.

தாழ் - நீண்ட
கூந்தலாள் - தமயந்தியின்மீது உள்ள
வேட்கை - ஆசையை
அகத்து - மனதிற்குள்ளே
அடக்கி - அடக்கி
கற்பின் - (தேவருக்குக் கொடுத்த வாக்கைக் காக்கவேண்டும் என்ற) முறைமை என்னும்
தாழ் - தாழ்ப்பாள்
வீழ்த்த - போட்டிருந்த
கதவு - (நிறை என்னும்) கதவு,
நீண்ட - நெடிய
கமலத்தை - (தாமரை மலர்போன்ற நளனது) கண்களை
நீலம் - (நீலோற்பலம் போன்ற தமயந்தியின்) கண்களின்
கடை - கோடியானது
சென்று - போய்
தீண்டும் - பட்ட
அளவில் - மாத்திரத்தில்
பூண்டது - (அவள்பால்) கொண்ட
ஓர்-ஒரு
அன்பின் - அன்பினால்
திறந்தது - திறந்துவிட்டது.

விளக்கம் :—திறந்தது, (பயனிலை). எது திறந்தது? கதவு, எழுவாய். (கதவு என்பது இங்கு எதைக் குறிக்கின்றது? போனபோக்கெல்லாம் போகவிடாமல் மனதை அடக்கி ஆள்கின்ற நிறை என்னும் குணத்தைக் குறிக்கின்றது). என்ன செய்திருந்த கதவு திறந்தது? வீழ்த்த கதவு - போட்டிருந்த கதவு. என்ன வீழ்த்த கதவு? தாழ்வீழ்த்த கதவு - தாழ்ப்பாள் போட்டிருந்த

கதவு. நிறையாகிய கதவிற்குப் போட்டிருந்த தாழ்ப்பாள் எது? கற்பின்தாழ் - முறைமை அல்லது நீதி என்னும் தாழ்ப்பாள். எதை உள்ளே அடக்கித் தாழ்கோல் போட்டிருந்த கதவு திறந்தது? வேட்கை அகத்து அடக்கிக் கற்பின்தாழ் வீழ்த்த கதவு திறந்தது - ஆசையை மனமாகிய அறையினிற்குள் அடைத்து முறைமையாகிய தாழ்கோல் இட்டிருந்த நிறை என்னும் கதவு திறந்தது. யார்பேரில் இருந்த ஆசையை? கூந்தலாள் வேட்கை - கூந்தலை யுடைய தமயந்தியின் மீதுள்ள ஆசையை. எப்படிப்பட்ட கூந்தலாள்? தாழ் கூந்தலாள் வேட்கை - தாழ்ந்த அதாவது நீண்ட கூந்தலை யுடையவள் மீதிருந்த ஆசையை.

நளன் தன் மனமாகிய அறையினிற்குள் தமயந்தியின் மீதிருந்த ஆசையை, வெளிவர விடாமல் அடைத்து, முறைமையென்னும் தாழ்கோலிட்டு வைத்திருந்த நிறையாகிய கதவு எப்பொழுது திறந்தது? அளவில் - மாத்திரத்தில். எந்த மாத்திரத்தில் திறந்தது? நீண்டும் அளவில் திறந்தது - பட்டமாத்திரத்தில் திறந்தது. என்ன செய்து நீண்டுமளவில் திறந்தது? சென்று நீண்டுமளவில். எது? கடை - கோடி. எதன்கடை? நீலக்கடை - நீலோற்பலம் போன்ற தமயந்தியின் கடைக்கண் பார்வை. எதை நீலக்கடை சென்று நீண்டுமளவில் கதவு திறந்தது? கமலத்தை - தாமரை மலர் போன்ற நளனின் கண்களை. எப்படிப்பட்ட கமலம் அது? நீண்ட கமலம் - விசாலமான கமலம்.

ஏன் தமயந்தியின் கடைக்கண்பார்வை நளனது கண்ணை எட்டியதும் அவனது ஆசை மனதினுள் அடங்காமல் பெருகலுற்றது? அன்பின் - காதலால். எந்த அன்பினால்? பூண்டதோர் அன்பின் - அவன் கொண்டிருந்த ஒரு காதலால்.

விரிவுரை:—"நளன் தமயந்தியின்மேல் கொண்டிருந்த காதல் அதிகமாதலால், தேவர்களுக்கு அவன் கொடுத்த வாக்கைப் பிழைக்கப்படாது என்னும் எண்ணத்தால் எவ்வளவுதான் அந்த ஆசை வெளித்தோன்றாதபடி தன் மனத்தினுள்ளே அடைத்து வைத்திருந்தாலும் தமயந்தியின் கடைக்கண் பார்வையின் அருமையால் அவனது மனத்திட்பம் இளகிவிட்டது," என்று இந்தச் செய்யுள் நளனின் செய்தியைக் கூறுவதாகக் கொள்வதே தகுதியுடைய பொருளாம்.

நளனும் தமயந்தியும் சந்தித்தவுடனே இவரிவர் இன்னார் என்று அன்னம்சொன்ன அடையாளங்களால் தெரிந்துகொண்டிருக்க முடியுமோ முடியாதோ, எப்படியாயினும் மனதிற்கு மனதே சாக்ஷி என்னும் பிரமாணப்படி அவர் ஒருவாறு ஊகித்திருப்பர்.

உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொடி
நெஞ்சு தடவு நெடுங்கண்கள்—விஞ்சவே [யாள்
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலராள்
ஆண்டதோள் மன்ன னழகு. 74.

பதப்பிரிவு:—உய்ஞ்சு கரை ஏற ஒட்டும்கொல் ஒண் தொடியாள் நெஞ்சு தடவும் நெடும் கண்கள் விஞ்சவே நீண்டதோ அங்ஙனே இங்ஙனே நீள் மலராள் ஆண்ட தோள் மன்னன் அழகு.

அன்வயம்: — ஒண்தொடியாள் நெஞ்சுதடவும் நெடுங்கண்கள் உய்ஞ்சு கரையேற வொட்டும் கொல்? அங்ஙனே, நீண்மலராள் ஆண்ட மன்னன் தோள் அழகு விஞ்சவே நீண்டதோ இங்ஙனே.

கருத்து:—தமயந்தியின் மார்பினில் தன் பார்வையைச் செலுத்திய நளனுடைய கண்கள், அதனைவிட்டு அகல இயலவில்லை. அப்படியே நளனது தோள்களின் அழகில் ஆழ்ந்த தமயந்தியின் கண்களும் அப்பார்வைவிட்டகல முடியவில்லை.

பதவுரை.

ஒண் - ஒளிபொருந்திய
தொடியாள் - வளையல்களை யணிந்த தமயந்தியின்
நெஞ்சு - மார்பை
தடவும் - எட்டிய (நளனினுடைய)
நெடும் - பெரிய
கண்கள் - கண் (அவளை)
உய்ஞ்சு - (காதல் என்னும் கடலை) தப்பி
கரை - கரையில்
ஏற - ஏற
ஒட்டும்கொல் - விடுமோ!
அங்ஙனே - அப்படியே
நீள் - பெரிய
மலராள் - மலரில் வசிக்கும் வீர இலக்குமி தனது
ஆண்ட - ஆட்சிக்கு இடமாகவுடைய
மன்னன் - மன்னனது
தோள் - தோள்கள்
அழகு - அழகினோடு
விஞ்சவே - அதிகமாகவே
நீண்டதோ - நீளமானதோ (ஆதலால்)
இங்ஙனே - இப்பக்கத்திலும் (தமயந்தியின் பாலும்)
அவன் கண்கள், உய்ந்து கரையேற
வொட்டுங் கொல்?

விரிவுரை:—இச்செய்யுளிற்குப் பலவேறு விதமாகப் பொருள் உரைப்பர். எனினும் முன்பின் செய்யுள்களைக் கருதினால் இங்குக் கூறிய அர்த்தம் ஒருவாறு பொருத்தமுடையதாகக் காணலாம். முன் செய்யுளில் நளனது மனநிலையைக் கவி கூறினார். இச்செய்யுளில் இருவரும் ஒருவரழகை ஒருவர் மாந்தியதைக் கூறுகின்றார். அடுத்த செய்யுளில் தமயந்தியின் நிலைமையைக் காட்டுவார்.

காதலென்னும் கடலிலிருந்து இருவர் மனமும் கரை ஏற முயல்கின்றன. ஆனால் தமயந்தியின் விம்மிப் பூரித்த மார்பினது அழகைக்கண்ட கண்கள் நளனது மனதைக் கரையேறவிட்டாமல் தடுத்தன. அவ்வாறே நளனது தோள்கள் தமயந்தியின் கண்களாலும் அளக்க முடியாமல் பெரியனவாதலால், அவைகளி னழகைக் காணலுற்ற தமயந்தியின் கண்களும் அவளது மனதைக் கரையேற விட்டதில்லை. அங்ஙனே என்பதற்கு 'அப்படியே' என்றும் இங்ஙனே என்பதற்கு 'இப்பக்கத்திலும்' என்று அர்த்தம் கொள்ளவேண்டும். தமயந்தியின் மார்பைப்பார்த்த கண்கள் நளனைக் கரையேற விடவில்லை. அப்படியே நளனின் தோளைப்பார்த்த கண்கள் இப்பக்கத்தில் தமயந்தியைக் கரையேற விடவில்லை. அவனுடைய கண் இவள் மார்பிலும், இவளது கண் அவன் தோளிலும் தங்குவது இயல்பே. கம்பரும், சீதையும் இராமனும் முதல்முதல் கண்ணுற்றதை வருணிக்கின்ற செய்யுள் இதற்கு ஆதாரமாகும்:—

"நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் றோளி லாழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே."

அங்ஙனே விஞ்சவே நீண்டதோ, என்பதற்கு, அப்படியே தமயந்தியின் பார்வைக்கு அடங்காதனவாய் அவள் எவ்வளவு தூரம் பார்த்தாலும் அதற்குமேலும் ஒருபடி அதிகமாகவே உயர்ந்து இருந்தனவோ நளனது தோள்களும்? அதனால்தான் அவளும் உய்ந்து கரை



யேற முடியவில்லையோ? என்ற பொருள் தரும். "வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா வாம நெடுந்தோள்" என்று பின் கலிநீங்கு காண்டத்தில் வந்திருப்பது இந்த அர்த்தத்திற்கு ஆதாரமா யிருக்கின்றது.

குறிப்பு:— உய்ந்து என்பது உய்ஞ்சு, என்றும் போலியாக வரும். ஐந்து என்பது அஞ்சு என்று வருகிற வழக்கம் யாருக்கும் தெரிந்திருக்கும். இப்படி அர்த்தம் மாறாமல் ஒரே பதத்தில் எழுத்து மாறி வருகிற வழக்க முண்டானால் அதற்கு இலக்கணத்தில் போலி என்று பெயர். நாயிறு ஞாயிறு. கலம் கலன். அய்யன் ஐயன். என்பன போலிகளுக்கு உதாரணம். இதன் இலக்கணத்தைப் பிறகு பார்ப்போம்.

மன்னுகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னுனும் புக்கொளிப்பப் புல்லுவனென்—
எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து [றன்னு
தடுத்ததே நாணுந் தறி. 75.

மன்னவனைத் தன் மார்புறத் தழுவ வேண்டும் என்ற ஆசை தமயந்திக்கு எழுந்தபோதிலும், அச்செய்கையை நாணத்தால் செய்யாதொழிந்தாள், என்பது இச்செய்யுளின் கருத்து. பிறகு அவள் ஒருவாறு தன் உள்ளத்தை அடக்கிக் கொண்டு கேட்கின்ற வார்த்தைகள் அடுத்த செய்யுளில் வருகின்றன.

காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனோ விஞ்சைக் கிறைவனோ— தேவனோ
உள்ளவா சொல்லென்றா ளூசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு. 74.

பதப்பிரிவு:—காவல் கடந்து எங்கள் கன்னி மாடம் புகுந்தாய் யாவனோ விஞ்சைக்கு இறைவனோ தேவனோ உள்ள ஆ சொல் என்றாள் ஊசல் குழை மீது வெள்ளம் வாள் நீர் சோர விட்டு.

அன்வயம்:—வாள் நீர் வெள்ளம் ஊசல் குழைமீது சோரவிட்டு, "காவல் கடந்து எங்கள் கன்னி மாடம் புகுந்தாய், விஞ்சைக்கு இறைவனோ? தேவனோ? யாவனோ? உள்ள ஆ சொல்" என்றாள்.

பதவுரை.

தமயந்தியானவள்
வாள் - வாள்போன்ற தன் கண்களிலிருந்து
நீர் - நீரை
வெள்ளம் - வெள்ளமாக
ஊசல் - முன்னும் பின்னும் ஊஞ்சலைப்போல்
அசைகின்ற
குழைமீது - குண்டலங்களின்மேல் விழும்படி
சோர - சொரிய
விட்டு - விட்டவளாய், நளனைப்பார்த்து,
"காவல் - காவலை
கடந்து - கடந்து
எங்கள் - எங்களுடைய
கன்னிமாடம் - கன்னிமாடத்திற்குள்
புகுந்தாய் - புகுந்தவனே, (நீ)
விஞ்சைக்கு - வித்தியாதரர் உலகிற்கு
இறைவனோ - அரசனோ? (அல்லது)
தேவனோ - தேவன்தானோ?
யாவனோ - (அல்லது, வேறு) யாவனோ?
உள்ள ஆ - உள்ளபடி
சொல் - சொல்"
என்றாள் - என்றனள்.

விரிவுரை:—நளனைக்கண்ட சந்தோஷத்தினால் தமயந்தியின் கண்களினின்று நீர் பெருகியது. வாள், என்பது வாள்போன்ற கண்ணைக் குறிக்கின்ற உவமை ஆகு பெயர். வாள் போன்ற கண்களிலிருந்து பெருகிய வெள்ளம் குழைகளின் மீது விழுந்ததாம். குழை காதில் அணியும் ஆபரணம். சொரிந்த நீர் அதன்மேல் விழுவதென்றால் அவளது கண்கள் காதளவு நீண்டன என்பது தெரிய வருகின்றது.

அக்குழைகளை ஊசல் குழை என்றார் கவி. அதாவது, ஊஞ்சலைப்போல் முன்னும் பின்னும் அசைந்து கொண்டிருந்தன அவள் குண்டலங்கள். அசைந்ததோ இல்லையோ என்னும்படி தலை வெகு சிறிது அசைந்தாலும் அவ்வசைவைக் காதில் அணிந்த குண்டலங்கள் தோன்றும்படி ஆடிக் காட்டிக்கொடுத்து விடும். ஒன்றினைப்பார்த்து இது நாம் எண்ணியதோ வேறொன்றோ என்ற சந்தேகம் கொண்டால் நம் தலை சிறிதளவு 'இல்லை, ஆம்' என்பதை மாறிமாறி யுணர்த்துங் குறிப்பினில் அசைவது சகஜம். தமயந்தியின் தலையும் அவ்வாறு சந்தேகத்தினால் இச்சமயம் அசைந்திருக்க வேண்டும். ஆதலாற்றான் அவளணிந்திருந்த குண்டலங்கள் அச்சமயம் ஊஞ்சலாடின. ஆயின், அவளுக்கு உண்டான சந்தேகம் இச்சந்தர்ப்பத்தில் யாவதா யிருத்தல் கூடும் என்று யூகிப்பது வெகு சுலபம். "அன்னம் உரைத்த நளன் இவன்தானோ? அவனாயின் கன்னிமாடத்துள் காந்து வந்திரானே, ஆதலால் அவன் அல்லனோ?" என்னும்சந்தேகமும் அவளடைந்த சந்தோஷத்திற்கிடையே சிறிதளவு கலந்திருக்க வேண்டுமென்று எண்ண இடமுளது.

கம்பருக்கும் புகழேந்திக்கும் இருக்கின்ற கருத்துத் தொடர்பை இதற்குமுன் இரண்டொருஇடங்களில் கண்டோம். கம்பர், சிலம்பு அரற்றும், என்று விட்டிருக்க, அவை என்ன சொல்லி அரற்றும் என்பதைப் புகழேந்தி காட்டினார். (131-வது பக்கம்) ஆனால் 'மூலைமுகத்தைப் பார்த்து மயங்கினான்' என்று மாத்திரம் கூறிய புகழேந்தியின் கருத்தைக் கம்பர் செய்யுளால் விளக்க இயன்றது (205-வது பக்கம்). அவ்விதமே, இங்குத் தமயந்தியின் குண்டலங்கள் எந்தச் சந்தேகத்தின் காரணமாய்த்தான் அசைந்திருக்க வேண்டுமென்பதையும் கம்பரைக் கொண்டே உணரக்கூடியவர்களா யிருக்கின்றோம்.

188999

விச்வாமித்திர முனிவனுடன் மிதிலைக்குள் புகுந்து வீதிவாய் நடந்த இராமனைச் சீதை தன் கன்னிமாடத்திலிருந்து கண்ணுற்றாள். காதல்கொண்டாள். பிறகு அவன் சிவபிரான் பிடித்த வில்லை ஒடித்தபோது இவள் அருகில் இல்லை. ஆனால் தோழிமார் கூறிய அடையாளங்களால் வில்லை ஒடித்துத் தன்னை மணக்க இருப்பவன், முன் அவள் கன்னிமாடத்தில் கண்டு காதல் கொண்டவனாகவே இருக்கவேண்டு மென்று ஒருவாறு உறுதிகொண்டா ளெனினும், ஒருவேளை அவன் அல்லாது போவானோ என்னும் சந்தேகம் விவாகநாள் வரையிலும் கூட அவளை விட்டபாடில்லை. ஏனெனில், அந்நாள் மணக்கோலம் இவளுக்குச் செய்வித்த தோழியர் குண்டலம் இட்டனர் என்பதைச் சொல்லவருகின்ற கம்பர் பாடிய பாடலால் இது விளங்குகின்றது:—

வெள்ளத்தின் சடிலத் தான்றன்
வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் ஞவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை
யல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னூச லாடக்
குழையிழ லூமிழ விட்டார்.

"கன்னிமாடத்திலிருந்த தனது உள்ளத்தைக் கவர்ந்துபோன இளவல்தான் பின் சிவனது வில்லை

முறித்த வீரனே அல்லவோ என்று மூன்றும் பின்னும் அலையும் அவன் மனதோடு சேர்ந்து ஊஞ்சலாடும்படி சிதையினது காதில் குண்டலங்களைத் தொங்கவிட்டனர்,'' என்பது இச்செய்யுளின் பொருள்.

இவ்விதம் புகழேந்தி குறிப்பில் விட்ட கருத்தைக் கம்பரில் பரக்கக் கண்டு தமயந்தியின் சந்தேகத்தை அவள் அணிந்த குழையின் மூலமாய்த் தெரிந்துகொள்கிறோம்.

தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னுட ரேவனுடன் போந்தவா சொல்லித்தன்
கன்னுடுஞ் சொன்னா னளன். 75.

''தான் நளன் என்பதையும் தேவர்களுக்குத் தூதனாய் வந்திருப்பதையும் அவன் தமயந்திக்குக் கூறினான்'',என்பது இச்செய்யுளின் கருத்து. கூறி அடுத்த செய்யுளில் தன் உரையை முடிக்கின்றான்.

என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவா யென்றான் றொடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து. 76.

பதவுரை.

தொடையில் - பூமாலையிலிருக்கிற
தேன் - தேனை
தும்பிக்கு - வண்டுகளுக்கு
ஊட்டுவான் - ஊட்டுகின்றவனாகிய நளன்
எல்லாம் - எல்லா விஷயங்களையும்
உரைத்து - (தமயந்திக்குச்) சொல்லி,
"என் - என்னுடைய
உரையை - வார்த்தைகளை
யாது - என்னவென்று
இகழாது - அவமதிக்காமல்,
இமையவர் - தேவர்கள்
வாழ் - வாழ்கின்ற
பொன் உலகம் - தேவலோகத்தை
காக்கும் - ஆள்கின்ற
புரவலனை - இந்திரனை
மென்மாலை - மெல்லிய சுயம்வர மாலையை
சூட்டுவாய் - சூட்டக் கடவாய்''
என்றான் - என்று சொன்னான்.

விரிவுரை :— ''எங்களிலே தேமாலை சூட்டும்படி சொல்'' என்று இந்திரன் எங்களுக்குள்ளே யாருக்காவது மாலை சூட்டும்படி சொல், என்றுதான் சொல்லியனுப்பினான். (65-வது செய்யுள்). இருந்தாலும் நளன் அவ்வாறு கூறாமல் "இந்திரனுக்கு மாலையிடு'' என்று மற்ற தேவர்களை விட்டுவிட அவனை அறியாமலே நேர்கின்றது. தமயந்தியின்மீது இவனுக்கு இருந்த அன்பு சுயநயக் காதல் அல்ல. ஆகையால், தனக்கு அவள் வாய்க்காமற் போயினும், சிறு தேவர்களை மணக்காது அவள் தேவேந்திரனையே மணக்கட்டும் என்று அவள் பொருட்டே கூறியதெனக் கொள்ளல் வேண்டும். நளன் வள்ளலாதலால் அவன் வாயில் இவ்வாறு தூதும் மாறி வந்தது.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 3. நகரப் படலம்.

[294-ம் பக்கத் தொடர்ச்சி]

### கற்றனர் கல்வியை யுற்றன பிறபொருள்.

வர்த்தகம் பெருத்த தேசங்களில் களவு வஞ்சனை முதலிய வகைகளால் பிறர்பொருளைக் கவர்கின்ற செயல்கள் காணப்படா வென்றும், ஆனால், ஈகை விருந்தோம்பல் தன்னயம் மறுத்தல் ஆகிய தியாகச் செயல்களும் அங்கு இடம்பெறுவது இயலாதென்றும், மாண்டஸ்க்யூ என்னும்பிரஞ்சுசாதிப்பண்டிதர் தான்செய்ததேசதத்துவ ஆராய்ச்சியின் முடிவை எடுத்தோதக் கண்டோம். இம் முடிவின் வாய்மையை இக்கால அனுபவத்தாலும் முன்னுள் நூல்களாலும் சோதிக்கின்ற காலையில் இருவகையிலும் அது வாய்மை பிறழ்கின்றது. கடைக்கார சாதியாரென்றே பேர் எடுத்திருக்கின்ற (A Nation of shop keepers) ஆங்கிலேய ரிடையேனும், மற்று அமரிக்கா போன்ற வியாபார நாடுகளிலும் கள்வர் மற்ற இடங்களை விட அதிகமென்று கூறலாயின் அருமேயலாது, வீட்டிற்குத் தாழ்கோல் அங்குவேண்டியதே இல்லை என்று செப்புவார் இலர். கம்பரின் கருத்திலே கட்டி எழுகின்ற இக்கோசலநாடு வர்த்தகவளம் பெருகியிருந்ததேனும் கள்வர் இலாமையும் ஈகைக்குணமே எங்கும் நிறைந்தும் மற்றப் பிரான்சு புலவரைப் பொய்யாக்கி வைக்கவே தோன்றியதுபோல் பொலிகின்றதே.எனின் இது யார் பிழை? மாண்டஸ்க்யூவின் பிழையுமன்று. அவரது ஆராய்ச்சிக்கு இலக்காகிய தேயங்களில் இல்லாத ஒன்று கோசலத்தில் இருந்ததால் அவர்கண்ட நியமமொழிய நன்மையே இங்கு எஞ்சுகின்றது. வர்த்தகத் தொழிலில் தீமை இல்லை. வர்த்தகமன்றி வாழ்விளிற்கோர் நோக்கமும் முடிவுமில்லை என்னும் கருத்தில்தான் சுயநயச் சுபாவத்தை மேன்மேலும் வளர்க்கின்ற பொல்லாங்கு அமைந்து கிடக்கின்றது. சிறுவிலைக்கு வாங்கிப் பெருவிலைக்கு விற்பது வணிகம். இவ்விரண்டிற்கும் இடையே எஞ்சுவது இலாபம். வணிகமும் இலாபமுமே தவிர வாழ்க்கைக்கு வேறு முதலும் முடிபுமில்லை என்னும் கருத்தொன்றே தலைவிரித்தாடுமாயின் மாண்டஸ்க்யூ துணிந்த கொள்கைக்கு மாறான முடிவெய்தவியலாது. வர்த்தகச் சாமர்த்தியம் பெற்றவர் ஒருவகையில் வாய்மையைக் கையாள்வர். அதுவும் மெய்ம்மையின்பால் அவர்க்கிருக்கும் அன்பினால் என்று எண்ணவேண்டா. பொய்யும் திருடும் வழங்கினால் 'பேரம்' பெருகாதெனும் பயத்தினால் மெய்யும் அவர்க்கிடையே சிறிது தோன்றுவதாகின்றது. நாலுபேர் தன்னை நம்பி வர்த்தகம் செய்ய வருமாறு சத்தியத்தையும் அவ்வர்த்தகச் சாதனங்களுள் ஒன்றாகப் பாவித்து விவகரிப்பார் வாய்மை பொய்யினும் கடையாய பொய்யன்றி வேறன்று. திருடினால் இலாபமுண்டு, என்று சிலர் திருடி இலாபத்திற்கு இலாபமும் பெறாது கட்டங்களுக்கும் பெரிது தம்மை ஆளாக்கிக் கொள்வார் அறிவிலிகள். திருடாதிருந்தால் அதிக இலாபமுண்டு என்று அனுபவபூர்வமாய் உணர்ந்து திருடாதவர்கள் பெருங் கபடர்கள். எவ்வாறாயினும் வர்த்தகக் கருத்தே பிரதானமா யுடையார்மாட்டுக் கள்ளாமை



காணப்பெறும் என்னும் தன்மை எஞ்சி நிற்பது மாண்டஸ்க்யூவின்கொள்கைக்குத் தர்க்கத்தோடியன்ற ஆதாரமாகின்றது.

மற்று, வர்த்தகமே கருத்துடையார் இலாபம் கருதி வஞ்சனைகள் செய்யாராயினும், அவ்விலாப வாஞ்சையே அவர்கள்பால் வண்மைக்குணம் சேரவொட்டாது தடுக்கும். வர்த்தகலாப மனைத்தும் சுயலாபம். ஆதலால் தம் குறை தீர்வுள்ளாது பிறர்க்குறும் வெங்குறை தீர்க்கப் புகும் விழுமியோர், வாழ்க்கையின் பயனெலாம் வணிகமே என்று விவகரிப்போ ரெங்நாளு மாகார் திண்ணம். வர்த்தகச் செய்தி பந்தயவோட்டம் போன்றது. மற்றவரைப் பின்னழுத்தித் தான் சென்று முன்னேறும் தன்மையிலே 'தியாகம்' என்னும் திவ்விய சிந்தைக்கு இடமில்லை. இது கண்டே மாண்டஸ்க்யூ,மனதடங்கலும் வணிக நோக்கந்தான் நிறைந்தவர் தன்னலமறுத்தலும் பிறர் நலம் பேணுதலும் நினைப்பவராகாப் பான்மையைக் காட்டினார். ஆதலின் அவர்கண்ட கொள்கை வர்த்தகக் கருத்துடைய மக்களின்பால் இருவகையிலும் ஒக்கும். ஏனெனில் அவர் ஆய்ந்த நாடுகளில் வர்த்தகம் செய்தவர் அதனையே தம் வாழ்க்கையின் கருத்தாகக் கொண்டிருந்தனர். இன்றைக்கும் அப்படியே கொண்டும் இருக்கின்றனர்.

கம்பர்பிரான் கற்பித்த கோசலத்திலோ வர்த்தகம் செய்தாரேனும் அது கையின் கருமமாய் நடைபெற்றதேயன்றிக் கருத்தகலாப் பான்மையில் புடைபெயர்ந்ததில்லை. சூதாடுவார் அவர், ஆனால் அவர் கருத்திலே வாழ்ந்தது வேறு. தேறலும் மாந்துவார், ஆனால் மனமமர்ந்த கருத்து அதுவன்று. புரியும் செயல்கள் அங்குப் பற்பலவாயிருக்கத் தெரியும் சிந்தனை யாவருக்கும் எந்நாளும் இறைவிட்டகலாது நிலைநிற்பது ஒன்றே. கோசலத்தவர் கருத்தெல்லாம் கல்வியிலேயே தழைத்தது :—

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்லாரல் லாரு மில்லை"

[மேன்மேலும் கற்றுக்கொண்டே வருபவர்களைத் தவிர சும்மா நின்றுவிடுபவர் அங்கு யாவரும் இல்லையாதையால், கல்வி முழுவதும் கற்றுவிட்ட வல்லவர்கள் என்று யாரையும் சொல்வதற்கு இல்லை. மற்றுக் கல்வித்திறம் இல்லாதவர் என்று ஒருவரையும் சொல்வதற்கும் இல்லை.]

கற்றவர் கல்லாதார் என்னும் பாகுபாடு அயோத்தியில் வகுக்க இயலாது. எல்லாரும் எப்பொழுதும் கற்றுக்கொண்டே இருக்க யாரைத்தான் 'கற்றவர்' என்று சொல்வது? அவ்விதமே கற்றுக்கொண்டே யாவரும் வருவாராகக் 'கல்லாதவர்' என எவரைச் சுட்டிக்காட்ட இயலும். கல்வி கரையிலவாதலால் முற்றிய கல்வியர் முயற்கொம்பனையவர். கற்று வருபவரும் கல்லாதாராகார். ஆகலின் யாவருக்கும் கருத்தனைத்தும் எந்நாளும் எப்போதும் கவர்ந்திருப்பது கல்வியே என்றபின், மாண்டஸ்க்யூ கண்ட கொள்கைக்கு அயோத்திமாநகரம் ஆளாகாமல் காத்தது புதுமையல்லவே.

குடியாக கையாண்டுவரும் நாடுகளின் மேன்மையை இக்காலம் பற்பலர் பற்பலவாறு கொண்டாடிவரக் காண்கின்றோம். குடிகள் தம்முள் ஏற்றத்தாழ்வென்பது எள்ளளவுமின்றி யாவரும் எல்லா உரிமைகளும் பெற்றவர்களாய் அமைதல்வேண்டு மென்பது பொதுஜன சமத்துவத்தின் உயர்வைக் கொண்டாடுவார்களது கொள்கையாம். உரிமையும் மாறுபடுவது, இக்காலத்தில் செல்வத்தின் அளவிற்கேற்படி செல்வர்க்கு வாய்க்கின்ற காரணத்தால், அச்செல்வ வளவின் உயர்வையும் சிறுமையும் பொருந்தியதாகின்றது. எனவே தற்காலத்துப் பொதுஜன பிரதான இயக்கங்கள் பொருட் செல்வத்தையே பற்றியனவாய் நிகழக் காண்கிறோம். புன்பொருளையே உயிர்நிலையாக வைத்து நடக்கின்ற சமத்துவம் யாரையும் வாழவைக்காது. பொதுஜனப் பிரதானமென்னும் கொடிகட்டிப் பறக்கும் நாடுகளில், பொருள் சம்பந்தமாகவே யாவரும் விவகரிப்பதால், அக்கொடிகளன்றி அங்கு உயர்ந்தன யாவும் காண்கிலம். கம்பர் தன் கோசலத்தில் வைத்த சமத்துவதத்துவம் வேறு. அதனை முன் (170—172 பக்கங்கள்) விளக்கியிருப்பதால் கூறியது கூற இசையாது இங்கு விடுக்கின்றோம். ஆற்றல் நல்லற மலதிலாமையால் சமநிலையுற்ற கோசலப் பெருமக்கள் அவ்வறஞ் செய்யவேண்டும் என்னும் நினைவிற்கு வித்தாய கல்வியைச் சமமாகப் பகிர்ந்து ஏற்றந்தாழ்வின்றி அடைந்திருந்தனர் என்பதைக் கூறி வைப்பது இன்றியமையாமைபற்றி இங்குக் "கல்வி முற்ற வல்லாருமில்லை, அவை வல்லாரல்லாரு மில்லை'' என்னும் வாக்கியம் வருவதாயிற்று. மற்றச் செல்வங்களோ எனின்,

"எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ''

என்பர். உடைமை இன்மை என்னும் சொல்லளவு வேறுபாடு மற்றச் செல்வங்களால் தோன்றுமேயல்லாது அதனால் உயர்வு சிறுமை, இன்பம் துன்பம் என்ற ஏற்றந்தாழ்வு ஏற்பட நியாயமில்லை. உடைமை யெல்லாம் உயர்வன்று. இன்மை யாவும் இழிவுமன்று. 'குரங்கிற்கு வாலுண்டு, மனிதனுக்கு வாலில்லை' எனவரும் வாக்கியங்களில், உடைமையால் குரங்கிற்கு ஒரு பெருமையும் இன்மையால் மனிதனுக்கு ஒரு தாழ்மையும் நேரவில்லையே. இனி, "அவனுக்கு நோயுண்டு, இவனுக்கு நோயில்லை'' என்னுங்கால் உடைமையால் துன்பமும் இன்மையால் நன்மையும் நிகழக் காண்கிறோம். ஆதலால் "இல்லார் உடையார்'' என்பன வாசக பேதமே யன்றித் தன்மையைத் தாழ்த்தவும் உயர்த்தவும் கூடிய மாறுபாடுகளல்ல. எல்லாரும் செல்வவந்தாய்த்தான் இருந்தனர். ஆனால் அதுவல்ல அவர் சமத்துவத்திற்கேனும் உயர்விற்கேனும் அறிகுறி. மற்றொன்று இவ்வடிகளில் சிந்தித்தற்குளது. 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தினர்' என்று காட்டுவார் கம்பர். முன்னிரண்டடிகளில்,யாவரும் கல்வியை நாடினர். பின்னிரண்டடிகளில் யாவரும் செல்வங்களை எய்தினர். நாடுதலென்பது ஒன்றினை முயல்வதைக் குறிக்கும். எய்துதல் ஒன்று வந்து அடைவதைக் குறிக்கும். கல்வியே கருத்தாய் அங்கு யாவரும் நாடினர். செல்வத்தை யாவரும் செய்ய நினைத்திலர். செல்வங்களில் அவர் கருத்துச் சென்றதில்லை. அவை தாமாக வந்தெய்தின. ஏமாங்கத நாட்டின் பெருமையைக் கூறிவந்த திருத்தக்க தேவர், அது

"நற்பொருள் செய்வார்க்கிடம்
பொருள் செய்வார்க்கு மஃதிடம்''

எனப் புகழ்ந்து முடிக்கின்றார். இவ்வடிக்கு நச்சினார்க்கினியர் கண்ட பொருள், "அது நற்பொருளைப் பயக்கும் கல்வியைக் கற்பார்க்கு இடம்; நிலையாத பொருளைத் தேடுவார்க்கும் இடம்,'' என்பதாம். இந்தவொரு அடியின் கருத்துத்தான் கம்பர் செய்யுளில் விரிந்து வந்திருக்கின்றது. எனினும் கம்பர், கல்வியை மாத்திரம் செய்வதாகச் சொல்லி மற்றச் செல்வங்கள் எய்தின வென்று மாற்றிக்கொண்டு தன் கொள்கைக் கிணங்க அமைத்துக்கொண்ட நுட்பம் மிகவும் அழகிது.

நகரப்படலத்தின் எருத்துச் செய்யுளின் பெருமை இவ்வாறாகக் கோசலத்தின் தலைநகராய அயோத்தியின்

சிறப்பையும் அதனோடு கம்பர் தன் கொள்கையையும் முற்றுவிக்கின்ற ஈற்றுச் செய்யுள் கோடிபெறும். அயோத்திமாநகரை இன்பம் பழுத்தொழுகும் ஒரு கனியாக உருவகம் செய்கின்றார். இவ்வின்பப்பழம் பழுத்த தருவின் சினைகளைக் கருத்தான்றி இந்நாள் நாம் ஆராய்ந்து ஆராய்ந்து எவ்வளவு பார்க்கின்றமோ அவ்வளவிற்கு அவ்வளவு இவ்வுலகு நன்மை யெய்துமென்பதற்கு ஐயமில்லை.

எகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகும் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்தரு மம்ம லர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே.

[யாவற்றிற்கும் தனிமுதலாகிய கல்வி முளைத்தெழுந்து, அம்முளையானது அளவற்ற கேள்வி யறிவென்னும் அடிமரமாக வளர்ந்து, அதனிலிருந்து அருமையான தவம் ஆகின்ற இலைகள் தழைத்து, அன்பாகிய அரும்புகள் தோன்றி, அவ்வன்பு தருமம் என்னும் மலர்களாக மலர்ந்து,அம்மலர்இன்பப் பழமாகப் பழுத்ததைப் போன்றது அயோத்திமா நகரந்தானே]

எல்லா இன்ப நலங்களுக்கும் கல்வியன்றி வேறோர் வித்தில்லை. அக்கல்வியால் மெய்யறிவு வளரத் தவவொழுக்கங்கள் தோன்றுவதோடு அன்பு முதிர்வது இயற்கையே. நானும் நீயும் மற்றெல்லாப் பொருள்களும் வேறு வேறானவையன்று, ஒன்றே எனும் அறிவு ஒருவனை அன்பின்பால் சேர்க்காது போகாது. இவ்வுள்ளன்பு விரிந்து வெளிச் செய்கையாய்க் காண்பதே அறம். எனவே கம்பர் அன்பை அரும்பாக்கித் தருமத்தை மலராக்கினர். அறத்தால் வருவதே மெய்யின்பம். ஆதலால் மலர்ந்த தருமமே போகக்கனியாய்ப் பழுத்தது.

இவ்வொரு செய்யுள் யாவர் வாயிலும், அது காட்டும் வழியின் தத்துவம் யாவர் மனத்திலும், இடைவிடாது உலவிவருமாயின் இன்பத்தை நாடிப் பலவகைகளில் அல்லலுற்றுழலும் இவ்வுலகின் கதி முற்றிலும் மடைமாறி உய்யவே உய்யும். கம்பரனைய தெய்வப் புலவர்களின் தூய நெறியைக் கைகடக்க விட்டுவிட்டுக் கல்லாத மாந்தர் கூவுகின்ற படிற்றுரைகளை வேதமெனப் பாராட்டும் மாந்தர் சிற்றறிவை என் சொல்வது!

T. N. சேஷாசலம்.

# வானசாஸ்திரம்

[277-ம் பக்கத் தொடர்ச்சி]

## IV பூமி.

பூமியின் மேற்பாகம் தரையாயும் நீராயும்இருக்கின்றதை நாம் பார்க்கிறோம். தரையிலும் சில இடங்கள் உயர்ந்து மலைகளாயும் தாழ்ந்து பள்ளத்தாக்குக்களாயும் இருக்கின்றன. அதுபோலவே நீர் பாகமான சமுத்திரங்களிலும் சில பாகம் மிக ஆழமாயும் சில பாகங்கள் நீர்மட்டத்துக் கிட்டவு மிருக்கின்றன. ஆனால் மிக உயர்ந்த தரையும் மிக ஆழ்ந்த சமுத்திரமும் ஐந்து மைலுக்கு மேல் இல்லை என்று அளந்திருக்கிறார்கள். பூமியின் பரிமாணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்த வித்தியாசம் மிகச் சிறிது. பூமியின் உட்பக்கம் என்ன தன்மையானது? கீழே குடைந்து சென்றால் பலவகையான பாறைகள் இருக்கின்றன.ஆனால் இப்பாறைகள் முட்டையை ஓடுமூடியிருப்பதுபோல் பூமியைமூடியிருக்கின்றன. இந்தப் பாகம் சராசரி தரையிலிருந்து 50 அல்லது 60 மைல் தூரந்தா னிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எஞ்சிய பாகமெல்லாம் அழல் மயமாய் இருக்கின்றது. இது சிலரால் உருகிய நிலையில் இருக்கிறதாக எண்ணப்படுகிறது. ஆனால் வேறு சில சாஸ்திர நிபுணர்கள் அவ்விதம் இருப்பது முடியாது, சிற்சில பாகங்கள் தான் இந்த நிலையில் இருக்க மற்றப் பாகங்கள் எல்லாம் தடித்தே யிருக்கவேண்டும் என்று கொள்ளுகிறார்கள். எவ்விதமாயிருந்த போதிலும் பூமியின் உட்பக்கம் மிகவும் காங்கையுள்ளதா யிருக்கவேண்டுமென்பது சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. பூமியின் உட்பக்கம் இருக்கும் சூடு நாளடைவில் குறைந்து கொண்டேவருகிறது. ஆனால் முற்றிலும் இச்சூடு தணிய அனேக கோடி வருஷங்கள் செல்லவேண்டும்.

பூமியின் உட்பக்கம் அனலாயிருப்பதால் பூமி முழுவதும் ஒருகாலத்தில் சூரியனைப்போல எரிந்துகொண்டிருந்து நாளடைவில் குளிர்ந்து மேற்பாகம் தடித்து இறுகி இப்போது இருக்கிற நிலைக்கு வந்திருக்கவேண்டுமென்பது துணிபு. அவ்விதம் இறுகித் தடிப்பதற்கு 300,000,000 வருஷங்கள் சென்றிருக்க வேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். பூமி எரிகோளமாய் இருந்த காலத்தில் சீவராசிகள் ஒன்றும் இருந்திருக்க முடியாது. பூமியின் மேற்பரப்பில் நீரும் தங்கியிருக்க முடியாது. இப்பொழுது சமுத்திரமாய் நிற்கும் நீரெல்லாம் ஆவியாய் ஆகாயத்தில் வாயுவுடன் சேர்ந்திருந்திருக்க வேண்டும். பூமியின் மேற்பரப்பு குளிர்ந்து தடித்து நீர் தங்கத்தக்கதாக வந்தபின்தான் சீவராசிகள் உற்பத்தியா யிருக்கவேண்டும்.

ஆதியில் உற்பத்தியான சீவராசிகள் முதலில் நீரில் தோற்றின. அவைகள் நாளடைவில் வெவ்வேறு விதமாகமாறித் தரையிலும் வசிக்கத்தக்கவைகளாயின.இதை விரிக்கிற்பெருகும். மேலும்இவ்விஷயம் வானசாஸ்திரத்தோடு சேர்ந்ததன்று.

பூமியின் மேற்பரப்புத் தரையும் நீருமாயிருக்கிறது. இதை வாயுப்படலம் மூடியிருக்கிறது. வாயு இருக்கிறதென்பதை நாம் கண்ணால் காணமுடியாது. ஆனால் காற்றடிப்பதிலிருந்து வாயு இருக்கிறதென்பதை நாம் தெரிந்துகொள்ளுகிறோம். நாம் சுவாசிப்பதும் வாயு. வாயு இல்லாவிட்டால், பூமியில் உயிருள்ள பொருள்கள் எல்லாம் அற்றுப்போகும். பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுப்படலம் ஆக்ஸிஜின் (Oxygen) நைட்ரிஜன் (Nitrogen) என்னும் இருவாயுக்கள் (Gasess) கலந்து இருக்கும் வாயுக்கலப்பு. வேறு சில வாயுக்களும் இதில் சேர்ந்திருக்கின்றன. ஆனால் அவைகள் மிகவும் சொற்பமாய் இருக்கின்றன.

பூமியின் மேற்பாகத்தோடு சேர்ந்திருக்கும் வாயுப்படலத்தின் அடிப்படை நெருக்கமாயிருக்கிறது. மேலே செல்லச் செல்ல அடர்த்தி குறைந்துகொண்டு வருகிறது. ஐந்து அல்லது ஆறு மைலுக்கு மேலே சென்றால் நாம் சுவாசிப்பது மிகவும் கஷ்டமா யிருக்கும். ஏனென்றால் அந்த உயரத்தில் வாயுவின் அடர்த்தி மிகவும் குறைந்திருப்பதனால் சுவாசிப்பதற்கு ஒவ்வொரு சுவாசத்திலும் உட்கொள்ள வேண்டிய அளவு காற்றுக் குறைந்திருப்பதே காரணம். பூமியிலிருந்து எவ்வளவு தூரம் வாயுப்படலம் படர்ந்திருக்கிறதென்பதை நிச்சயமாக முடிவுசெய்ய முடியாது வாயுப் படலத்தின் உயரத்தைக் கணக்கிடுவதற்கு இரண்டு மார்க்கமுண்டு. ஒன்று சூரிய அஸ்தமனத்தின்பின் இருக்கும் வெளிச்சம். இது வாயுமண்டலத்தின் மேற்பாகங்களில் படும் சூரிய வெளிச்சமே. இதன் மூலமாய்க் கணக்கிட்டவரையில் வாயுப்படலம் 50 மைல் உயரமுள்ளதென்று தெரியவருகிறது. மற்றொன்று எரி நக்ஷத்திரங்கள். இவைகள் பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்திற்குள் அதிவேகமாய் செல்லுவதனால் காற்றுடன் தேய்ந்து அதன் மூலமாக உண்டாகும் சூட்டினால் எரிகின்றன என்று சொல்லியிருக்கிறோம். இவ்விதம் எரி நக்ஷத்திரங்கள் நெருப்புப் பற்றுகிறது 100 மைலுக்கப்பாலென்று தெரியவருகிறது. ஆகவே வாயுமண்டலம் 100 மைல் உயரமுள்ளது என்று சொல்லலாம். ஆனால் இந்த உயரத்துக் கப்பாலும் கொஞ்ச தூரமாவது வாயு இருக்கவேண்டும். இதற்கு மேலும் 50 மைல் தூரம் பாவியிருக்கவேண்டுமென்பது கொள்கை.



பூமியைச் சூழ்ந்திருக்கும்இவ்வாயுப் படலம் சூரியனிடமிருந்து பூமியிற்படும் காங்கையைச் சீக்கிரத்தில் புறஞ்செல்லாது அடைத்து வைக்கிற ஒரு திரைபோல இருக்கிறது. வாயு இல்லையேல் சூரிய உஷ்ணம் பூமியிற்பட்டு விரைவில் மறுபடியும் ஆகாய வெளிக்குள் சென்றுவிடும். இவ்விதம் செல்லாது தடுத்து உயிருள்ள பொருள்கள் உய்வதற்கு ஏதுவாயிருப்பது வாயுப் படலம். இது மாத்திரமன்று. கடல் நீர் ஆவியாய் மாறி மேற்சென்று திரும்பவும் மழையாய் வருஷிப்பதற்கும் இவ்வாயுப் படலமே காரணம். இவைகளைப்பற்றிய விசாரணை மற்றொரு சாஸ்திரமாக வகுக்கபட்டிருக்கிறது.

### ஒளிக் கிரணங்கள் (Light Rays)

சாய்வாய் ஒரு கண்ணாடிக்கு ஊடாகச்செல்லும்போது ஒளிக்கிரணங்கள் நேர்வழியைவிட்டு விலகி வேறுவழியில் செல்கின்றன.இதற்குஆங்கிலத்தில் ரிப்ருக்ஷன்(refraction)என்றுபெயர். இந்தத்தன்மை கண்ணாடிக்கு மாத்திரமல்ல, நீர், வாயு முதலிய ஒளி ஊடுருவிச் செல்லும் எல்லாப் பொருள்களுக்கும் உண்டு. மேற்சொல்லிய விதம் வாயுமண்டலம் மேலிருந்து கீழே வரவர அடர்ந்து வருவதனால் சூரிய ஒளியின் கிரணங்கள் சூரியன் மேலே வாராத சமயங்களில் நேராய் வராமல் சற்று விலகிவருகின்றன. ஆகவே,ஒளி உற்பத்தியாகும் அண்டங்கள் உச்சிக்கு நேராயிருக்கும்போது தவிர மற்றைய நேரங்களில் அவைகள் நிற்பதாகத் தோன்றும் நிலைகள் அவைகளின் சரியான நிலைகள் அல்ல. சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் உதிக்கும்போதும் அஸ்தமிக்கும்போதும் இந்நிலை மாற்றம் அதிகமாய் இருக்கும். இதன் காரணமாக சூரியன் வானத்தடியின்மேற் கிளம்பு முன்னமே உதயமாகிறது. அவ்விதமே வானடியின் கீழ்ச் சென்றாலும் அஸ்தமனமாவதில்லை. சூரிய வெளிச்சம் சூரியனிலிருந்து பார்ப்பவர்கள் கண்களில் நேராய்ப் படுமானால் இந்த வித்தியாசங்கள் உண்டாகா.

# மதிப்புரை.

## மேகதூதம்

தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கக் காரியதரிசியும் எஸ். பி. ஜி. கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய, தை. ஆ. கனகசபாபதி முதலியார் இயற்றியது. கிடைக்கு மிடம்:—"பன்னூற் கழகம்," No. 7, வெங்கடாத்திரி நாயகன் தெரு, குயப்பேட்டை, P. B. சென்னை. விலை அணா 3.

அளகேசனதுவெகுளியாற் சாபமுற்று இன்னுயிர்மனையாளைப் பிரிந்துலர்ந்த இயக்கனொருவன் தன்னிலைமையவட்குரைத்து அவள் நிலைமை தெரிந்துவர முகிலொன்றைத் தூதுவிட்ட செய்தியை அழகோடியன்று செப்புகின்ற வடமொழி மேகசந்தேசம் என்னும் காளிதாச மகாகவியின் நூலைத் தொடர்ந்து எழுநூறு அடிகளுக்குச் சிறிது மேற்கொண்ட அகவற் பாவினால் ஸ்ரீமான் கனகசபாபதி முதலியார் தமிழில் எழுதிய புத்தகம் ஒன்று எம்பார்வைக்கு வந்துளது.

இவ்வாசிரியர், வடமொழி முதனூலில் இடக்காய் அமைந்த பாகங்களை விடுத்தும் மாற்றியும் ஒவ்வோரிடத்து எழுதியதன்றி மற்றபடி முற்றிலும் அதிற்கண்ட வருணனை நயங்களையும் வாசகச் செம்மையும் பழுதுறுவகைக் காத்துவைத்த திறத்தைப் பாராட்டுகின்றோம். அடிகள்யாவும் இடறாமல் நடக்கின்றன. வகையுளி புகுந்து சீரைக் குலைக்கவில்லை. மோனை எதுகைகளுக்காக இவர் வருந்திய இடங்கள் சிலவே. பிற்பகுதியில் எதுகையை நினைக்காமலே பொருளும் ஓசையும் போமாறு இனிமையாய்ப் பாடியுள்ளார். மோனை யெதுகைகள் புரிகின்ற வஞ்சனைக்கு ஆளாகிப் பொருளயர்ந்து போய் விடுதல் சகஜமெனினும் இவ்வாசிரியர் யாம் கண்டவரையில் இரண்டொரு தரமே மோனைக்கும் எதுகைக்கும் மோசம் போயுளார் என்று தெரிகின்றது:—

"நிறமென் றெண்ணி மயங்கி நிற்க
மறலியும் நயக்கும் மங்கையர் பலரும்."

என்றுவரும் அடிகளில், "எமனாலும் விரும்பப்படுகின்ற மாதர்" எனப் புதியதோர் சிறப்பு அவர்களுக்கு எய்தியது, நிறத்திற் கெதுகை மறலி யானதாலன்றி வேறன்று. "இவளைக் கண்டால் எமனும் ஆசைப்படுவான்" என்று கூறுவதற்குச் சிறிது வாய்கூசும். மறலியும், என்பதிலுள்ள உம்மையை இழிவு சிறப்பாகக் கொண்டாலும் பொருள் விளங்கவில்லை, உயர்வு சிறப்பாகக் கொண்டாலும் பொருள் விளங்கவில்லை. 'மறலி நயக்கும் மங்கை' என்று காளிதாசனும் தன் கவியில் கூறக் கண்டிலேம். ஆதலால் எதுகையே, மோனையையும் துணைகொண்டு மங்கையைக் கொண்டுபோய் எமனிடத்தில் சேர்த்துவிட்டது. "நாயும் நயக்கும் நல்லெழில் நங்கை" என்னும்படி முற்று மோனைவைத்துப் பாடக்கூடிய புலவர் எண்ணிறந்தோர் எக்காலத்திலும் இருந்து வருகின்றனர். அவர்களைக் கருதுங்கால் நமதாசிரியர் இவ்வொரு விடத்திலே இச்சிறுவகையில் ஒரு சிறிது எதுகையில் வழுக்கினாரென்பதைப் பெருங் குறையாகக் கொள்ளோம்.

பின்னுமோர் இடத்தில்,

மனத்தைக் கலக்கிடு முழக்கமும் கொடாது
வனசம் போன்ற வதனம் பெற்ற
மின்னும் நினது மெல்லிய மனையின்
இன்னொளி யாலே இலக்கிடு வழியை,

எனவரும் அடிகளில், மின்னலுக்குத் தாமரைமலர் போன்ற முகம் கொடுத்ததும் மன வன, என்னும் எதுகை பெறும்பொருட்டே யாதல் வேண்டும். மின்னலைப் பெண்ணாகக் கூறுவது பொருந்தும். ஆனால் அதனைத் தாமரை முகத்தோடு உருவகப்படுத்த இய

லாது. அந்த இடத்தில் காளிதாசனும் அவ்வாறு கூறவில்லை.

முதல் நூலில் இல்லாததைச் சொல்லி இடருற்றது இவ்விரண்டு இடங்கள்தாம். அங்கிருப்பதை விட்டுச் சிறிது நயங்குறைந்த இடமும் ஒன்றுளது. "உயர்குலமுகிலே உன்னை யான் இரப்பதும் தகும்" என்று வேண்டுகின்ற இயக்கன்,

"தாழ்ந்தோர் உயர்குணத் தலைவரை இரத்தல்
காழது வென்றே கழறுவர் மேலோர்
இழிகுண இயல்புடை ஈனரை இரத்தல்
பழியுடைத் தென்றே பகருவர் அன்றோ"

என எடுத்துக் காட்டுவதாக இவ்வாசிரியர் வரைந்துளார். காளிதாசன்சொல்வது அதுவல்ல. "இரப்பதெனின், கயவர்பால் இரந்து அதைப் பெறுவதைக் காட்டிலும், பெருனெனினும் பெரியரை இரப்பது நன்றே," என்பது மூலசுலோகத்தின் கருத்து. இக்கருத்தின் நயமும் வாய்மையும் மொழிபெயர்ப்பில் மறைந்தன. காளிதாசன் யாரையும் இரக்கச் சொல்லவில்லை. "இரப்பதற்கு நேரிட்டால் ஈனரை இரக்காமல் பெரியோரையேனும் அடைந்து இரப்பாய்" என்னும் தர்மம் இதில் அடங்கியிருக்கின்றது. ஆனால் மொழிபெயர்ப்பின்படி, பெருமையடைகின்ற வழிகளில் பெரியோரை இரப்பதும் ஒன்றாயிருப்பதுபோல் தோன்றுகின்றது.

இத்தகைய இடங்கள் இரண்டொன்று தவிர மற்றப் பாகங்களிலெல்லாம் நமது முதலியார் மிகவும் முயன்று முதல் நூலின் நயத்தையும் கருத்தையும் வெகு அழகாய்த் தந்நூலுள் அமைத்துப் பாடியிருப்பதை யாவரும் பாராட்டுவார். நாம் குறைகளாகக் காட்டியவைகளும் உண்மையிற் குற்றங்களல்ல. இவையன்றி இந்நூலிற்கு விரோதமாய்ச் சொல்வதற்கு வேறொன்றுமில்லை யென்றால், அதுவே அதன் மேன்மைக்குச் சான்றாகும்.

காணுங்கால் தன் நாயகி துயிலமர்ந் திருப்பாளாயின் அவளை மெல்லென எழுப்புமாறு இயக்கன் மேகத்தை வேண்டுகின்ற பாகத்தைக் காளிதாசனின் காவியப் பெருமைக்கும் இவ்வாசிரியரின் செய்யுள் நடைக்கும் உதாரணமாகக் காட்டலாம். இதுபோன்றே பெரும்பான்மை எல்லாப் பாகங்களும் அழகுடன் அமைந்திருக்கின்றன:—

அன்போ டெழுந்த அம்புத கேளாய்
தொன்னகர் மாளிகை மன்னிடும் போழ்து
நின்றன் தோழி நீள்துயில் அமரின்
எழுப்பா திருக்க என்னே என்றால்
அவளது கனவில் என்னுடை உருவம்
தோன்றி இருப்பின் தொடுத்த பாசம்
மிகுந்தே இருத்தலின் மெல்லெனக் கூடிக்
கழுத்தொடு தோளுறக் காதல் கொள்ளும்
அக்கால் முழக்கம் கேட்பா ளாயின்
இன்ப முற்றவட் கின்னல் விளைக்கும்
சிறிது தாழ்க்க இறைஞ்சுவன் நின்னை
நின்னிடத் துதிக்கும் நின்மல மாய
மந்த மாருதம் மெல்லன வீசித்
துயிலதை அகற்றி அயில்வேற் கண்ணள்
நின்னு ருருவை நோக்கிடுங் காலை
மின்னொளி தன்னை அடக்கிக் கொண்டு
கம்பீர தொனியொடு கழறுக இவையே:

இவ்வடிகளில் பதங்கள் பிரிந்திருப்பது எம்முடைய செயலன்று. அக்குறை நூலாசிரியருக்கே உரியது. உயிரையும் மெய்யையும், உயிரையும் உயிரையும், புணர்த்தினால் படிப்பவர்க்குப் புரியாது போகுமோவெனும் அச்சத்தால் பிரித்தெழுதிப் பாட்டின் ஓசையை இவரைப் போன்றே பல ஆசிரியர்களும் சிதைத்து விடுகின்றனர். செய்யுள் நூலைப் படிக்க எடுப்பவர்க்குப் பதமும் பிரித்துணரத் தெரியாம லிருக்குமென்று வீணாகப் பயப்படுவானேன். மெய்யொடுமெய் புணருங் காலத்திலேனும் சிறிது மயக்கம் ஏற்படலாம். எதுவாயினும் செய்யுள் இலக்கியத்தில் பிரித்தெழுதுதல் இலக்கணத்திற்கு விரோதமான செய்கை. "ஊனமில் இந்தியம் உற்றிடும் உயிர்கள்," எனவொரு அடியில் அத்தனை பதங்களும் உயிரும் மெய்யும் பயிலாது அகன்றால் அகவலோசை எப்படி எய்தும்?

---

## முல்லை.

மலரொளி னுலகில் முல்லையே யெனப்
பலருங் கூறுப பஞ்ச பாணனும்
நாணில் தொடுப்பது நவமல் லிகையே
என்று கவிஞர் எத்திடு மாண்பது.
கலைவல் லவர்புகழ் கற்பிற் சிறந்த
மகளிர்க் குரியது முல்லைத் தொடையே
பாவையர் பற்களின் பந்தியி னந்தம்
முல்லை யரும்பின் முகுர மொத்ததே.
முப்பொறி மயக்கும் முருகுறு முல்லை
பாலைப் பழிக்கும் பனிநிற மேந்தி
மாலைப் பொழுதினில் மலர்மாண் புடைத்து.
மன்னரு மாண்பரும் மதிப்புடன் விரும்பி
மகிழப் பெறுவதும் மல்லிகை யணையே.
மதுகர மொய்த்திடு மாலதி மலரணி
மாலோ னுகித்ததும் முல்லையர் குலமே.
ஆயர் பாடியில் ஆய்ச்சியர் சூழக்
குறுஞ்சுனை யாடிக் குரவைக ளாடிக்
குழலினை யூதிக் குழைத்து நின்ற
திருமால் வதியுந் திணையு முல்லையே!

வை. சூ. சாஸ்திரி.


ஆர். பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.,

எழுதிய நான்கு செந்தமிழ் நூல்கள்.

தமிழ்நாட்டு நவமணிகள்:—இதில் (1) ஆதிரையார் (2) விசாகையார் (3) மருதியார் (4) கோப்பெருந்தேவியார் (5) மணிமேலையார் (6) கண்ணகியார். (7) புனிதவதியார் (8) மங்கையர்க்கரசியார் (9) திலகவதியார் முதலிய ஒன்பது சரிதைகள் உள்ளன. விலை அணு 8.

திருவள்ளுவர் நூல்நயம்:—ஓர் அரிய பெரிய ஆராய்ச்சி நூல். திருவள்ளுவர் பெருமை, திருக்குறள்—பொது நூல், சமயப் பொது நூல், அறத்தின் திறம், அரசியல் முறை, இன்ப இயல், திருக்குறளின் உவமைத்திறம், திருவள்ளுவரும் பரிமேலழகரும் ஆகிய எட்டு அரிய பெரிய வியாசங்களையுடையது விலை ரூபா 1.

சிலப்பதிகார விளக்கம்:—இது ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். சிலப்பதிகாரக் கதை, சிலப்பதிகார ஆராய்ச்சி ஆகிய இரண்டு பாகங்களையுடையது. இந்நூலின் இரண்டாம்பாகம், நூலாசிரியர் பெருமை, அரச நீதியும் அரசியலும், ஆரிய அரசரும் தமிழ அரசரும், கண்ணகியின் கற்பின் திறம், வினையின் பயனே பயன், பண்டைக்காலத் தமிழ் மக்கள் நாகரிகம், சிலப்பதிகார நூல் நயம் ஆகிய ஏழு வியாசங்கள் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டுள்ளன. விலை ரூபா 1-8-0.

சிலப்பதிகாரக் கதை மாத்திரம் விலை அணு 8.

ஒற்றுமை:—குறைந்த சந்தாவில் சிறந்த மாதப் பத்திரிகை. அரிய கட்டுரைகளை யுடையது.

வருட சந்தா உள்நாடு ரூ 1.
வெளி நாடு ரூ 1½.

மாதிரிப் பிரதி இனும்.

ஒற்றுமை ஆபீஸ்,
சைதாப்பேட்டை, சென்னை.




# பழமுதிர் சோலை.

## யாது மூரே யாவருங் கேளிர்.

புலவர்சொற் கேளாத நாளெல்லாம் வாழாத நாட்களே. மண்ணிற் பிறந்த பாவத்தால் நம்மைத் தலையெடுக்கவொட்டாது மண்ணோடு அழுத்திவைக்கும் சூழ்பங்களுக்கிடையே உயிரினுண்மை நிலைகண்ட சான்றோர், தம் அனுபவத்தாலும் அனுமானத்தினாலும் நெடுந்தூரம் நோக்கவல்ல அவர் மனதின் வன்மையாலும் கனியவைத்து உண்டவர் உய்யுமாறு அளிக்கின்ற பழம் ஒன்றிரண்டு எம்மோடு கலந்துண்ண நண்பர்காள் வம்மின்.

செல்வம் உள்ளவர்க்கும் வறியோர்க்கும் வாய்மையில் எவ்வித பேதமுளது என்று சிந்தித்துளீரோ! 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை,' என்னுஞ் சொல் நம் செவியைப் பலசால் சேர்ந்திருக்கும். அச்சொல் மெய்யே. எனினும் அதற்கிது பொருளென நாம் கொண்ட கருத்தோ பொய். பொருள் இல்லையாயின் நமது இந்திரியங்கள் அவ்வப்போது அவாவுகின்ற இன்பங்களை எய்த முடியாதலால் பொருளிலார்க்கு இவ்வுலகம் இலதாகக் கூறினர் என்று எண்ணற்க. செல்வமிலாதான் அதனால் வரும்பயனை அடைய முடியாதென்பது உண்மையே. ஆனால் அப்பயன் யாவது என்பதை மதுரைக் கணக்காயனர் மகனார் நக்கீரரைக் கேட்டு தெரிந்துகொள்வோம். கூறுவர் அச்செந்நாப்புலவர்:—

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

[கடல்சூழ்ந்த உலகமெல்லாம் ஒருகுடைக்கீழ் ஒருவனாய்த்தானே ஆளும் அரசனுக்கும், இரவும்பகலும் தூங்காமல் அவ்வரசனின் யானையைப் பாதுகாக்கின்ற பாகனுக்கும், இருவருக்கும் பார்க்கப்போனால் உண்பது ஒரு நாழி அரிசியும் உடுப்பது இரண்டுமுழத் துணியுந்தானே. மற்றவெல்லாங் கூட இவ்விருவருக்கும் ஒரேதன்மையது. ஆனால் அரசன் ஒன்று செய்யக்கூடும், அது பாகனால் செய்ய இயலாது. கேட்டவர்க்குக் கேட்டதைக் கொடுக்கக்கூடிய செல்வம் அரசனிடத்திலேயே உளது. ஆதலால் செல்வத்தின் பயனாகிய ஈதல் என்பதை அவன் அடையக்கூடியவனா யிருக்கின்றான். வறியனாகிய பாகனிற்கு எய்தாதது இதுவொன்றே. இவ்வாறின்றிச் செல்வத்தைத் தாமே அனுபவிப்பதென்று தலைப்பட்டாலோ அச்செல்வத்தால் ஒரு பயனும் இல்லாமற் போய்ப் பாகனுக்குச் சமானமாய் ஆகி விடுவதுமன்றி, எல்லா நன்மைகளும் தவறிப்போக நேரிடும்.]

எம்மை நலிந்தாரிவரென்று சிலரைப் பகைப்பீர், நலஞ் சூழ்ந்தாரெனச் சிலரைப் பாராட்டுவீர், பெரியோரெனப் போற்றுவீர், சிறியோரெனச் சீறுவீர்காள் கணியன் பூங்குன்றன் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் அருளியதேனும் ஒருநாளும் வாடாத கனி இதனை யருந்துவீராயின் பித்தந்தெளிய மருந்தொன்று உளதென்று காண்பீர்.

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

[எல்லா ஊரும் எம்மூரே. யாவரும் எமது சுற்றத்தார்களே. கெடுதியும் நல்லதும் தாமாக நமக்கு வந்து சேருமே அல்லாது, பிறரால் நேர்வதுபோல் தோன்றினாலும் உண்மையில் அவர்கள் செய்ததல்ல. அவ்விதமே நமக்குத் துன்பம் வரும்போது வருவதும் அது நீரும்போது நீர்வதும் தாமாக நேர்கின்றன. நம்மால் ஒரு துன்பத்தை வருவித்துக் கொள்ள முடியாது. வந்ததைத் தீர்த்துக் கொள்வதும் முடியாது. அப்படி வருவித்துக் கொண்டதாகவும் போக்கிக் கொண்டதாகவும் எண்ணுவது பொய்யெண்ணம்! சாவதும் புதியதன்று. பிறந்தான் முதலே சாகத் தொடங்குகின்றா னல்லவா! ஒன்றினை வெறுத்து இது கெட்டதென்று தள்ளுவதுமில்லை. மழை பெய்து புரண்ட ஆற்றுவெள்ளத்தில் தள்ளுண்டு போகும் தெப்பத்தைப் போல அவரவர் உயிர் அவரவர் ஊழின் வழியே செல்லுமென்பது மெய்யறிந்த வித்தகர் சொற்களால் தெளிவாக உணர்ந்திருக்கின்றோமாதலால், பெரியோரை நாம் பெரிதும் மதிப்பதில்லை. அதனினும் சிறியோரை ஒருநாளும் இகழ்வதுமில்லை.]

ஆன்ம அனுபவம் சிறிதேனும் இருப்பவர் இவ்வாசகத்திற்கு 'ஓம்' என்றுரைக்காதிரார். எத்தகையவர்க்கும் அவரவர் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் தக்கபடி ஒவ்வொரு செவ்வியில் இப்பரிசாய எண்ணங்கள் மனத்தின்கண் தோன்றியே இருக்கும். எனினும் அவ்வெண்ணங்கள் சென்னல மின்மையால் உருவும் உரமும் பெறாது தோன்றியாங்கே மின்மினியென மறைந்து போகின்றன. ஆதலின் இப்பாட்டுக்களை நாம் பாராமற் சொல்லப் பயில்வோமாயின் அக்கருத்துக்கள் உளம் விட்டகலா துறைந்து நின்று உற்றவிடத்தி லுதவி புரிந்து மண்ணினின்று மெள்ளமெள்ள நமதெண்ணத்தைப் பறித்தெழுந்து விண்ணிலே கொண்டு சேர்க்கும். ஒவ்வொருவன் உய்ய உய்ய உலகமே உய்யுமன்றோ!

"சபரி."

(6) ஸ்ரீமத் வால்மீகி

# இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்ருய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | 244 | பக்கம் | 6 காண்டம் |
| அயோத்தியாகாண்டம் | 501 | ,, | |
| ஆரணியகாண்டம் | 254 | ,, | |
| கிஷ்கிந்தாகாண்டம் | 226 | ,, | ரூ 15 |
| சுந்தரகாண்டம் | 260 | ,, | |
| யுத்தகாண்டம் | 702 | ,, | |
| சுந்தரகாண்டம் தனியே | | | ரூ. 2 4 0 |

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை



லோகோபகாரி

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினல் லோகோபகாரிக்குச் சந்தா தாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாய் வெளி வருகிறது. முப்பத்தி நான்காவது ஆண்டு நடக்கிறது. பத்திராதிபர்: பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை. வருஷ சந்தா ரூபாய் 4. வெளிநாடுகளுக்கு ரூபாய் 6.

லோகோபகாரி பத்திரிகாலயம்
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.
மாதிரிப்பிரதி இனும். (7)

# யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்

(2) கம்பனி, லிமிடெட்.

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ஹூலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்
பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.
சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனல் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்றனர்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.




# வர்த்தமானம்.

டாக்டர் பெசண்டு:—ஜுன் மாதம் லண்டனுக்குப் போய் இவ்விடத்தில் சைமன் கமிஷன் நியமிக்கப்பட்டதைப்பற்றித் தேசத்திலுள்ள வெறுப்பைப்பற்றிப் பேசுவார்களென்று தெரிகிறது.

***

பூமி அதிர்ச்சி:-பல்கேரியா தேசத்தில் பூமி அதிர்ச்சி ஒன்று ஏற்பட்டு அதனுல் அனேக கட்டடங்கள் இடிந்து விழுந்து உயிர்ச்சேதமும் உண்டாயிருக்கிறதாம். இதைப் பற்றிய விபரங்கள் இன்னும் தெரியவில்லை.

***

வட துருவ பரிசோதனையின் பிரயாணம்:—பூமியின் வடதுருவ பரிசோதனைக்காக இத்தாலியிலிருந்து ஒரு கப்பலும் ஒரு ஆகாயவிமானமும் புறப்பட்டிருக்கின்றன. இதற்குத் தலைவர் ஜெனரல் கோபைல் என்பவர்.

***

ரயில் பாதைகளின் வருமானம் :—சென்ற வருஷத்தில் எல்லா ரயில் பாதைகளின் மொத்த வருமானம் 103 கோடியே 83 லக்ஷம் ரூபாய். முந்திய வருஷத்து வருமானத்தைப் பார்க்கிலும் 468 லக்ஷம் ரூபாய் அதிகம்.

***

ஜகதீச சந்திரபோஸ்:-சிலதினங்களுக்குமுன் ஐரோப்பாவுக்குப் பிரயாணமாயிருக்கிறர். இவர் ஐரோப்பாவில் பல தேசங்களிலும் உள்ள சர்வகலாசாலைகளிலும் தமது நூதன யந்திரங்களைக் காட்டுவதற்காகத் தம்முடன் அவைகளை எடுத்துச் சென்றிருக்கிறர்.

***

விவசாய விசாரணைக் கமிஷன்:—இதுவரையில் செய்துவந்த விசாரணைகளின் முடிவாய் தங்கள் ரிப்போர்ட்டைத் தயார் செய்து முடித்திருக்கிறர்கள். இந்த ரிப்போர்ட் மேமாதம் முடிவதற்குள் அச்சடிக்கப்பட்டு வெளிவரும்.

***

சைமன்கமிஷன் அங்கத்தினர்கள்:—ஏப்பிரல் 14-ம் தேதி லண்டனுக்குப் போய் சேர்ந்தார்கள். சர். ஜான் சைமன் இந்தியாவில் நடந்த பகிஷ்கார கிளர்ச்சியெல்லாம் குறைந்து வருகிறதென்றும் இந்தியாவில் அநேகர் கமிஷனுடன்சேர்ந்து வேலைசெய்யத் தயாரா யிருக்கிறர்கள் என்றும் சொன்னர்.

***

இந்த ரிப்போர்ட் விவசாயிகளுக்கு மிகவும்உபயோகப்படக் கூடியதாம். இதில் முக்கியமாய்க் கவனிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் எவ்விதம் நிலம் அதிக வரும்படியைக் கொடுக்கச்செய்ய முடியும் என்பதும் என்னவகைகளில் விவசாயிகளுடைய கடன்களைத் தீர்க்கலாம் என்பதும் கால்நடைகளை எவ்விதம் விருத்திசெய்யலாம் என்பதும் அவைகளுக்கு உண்டாகும் நோய்களை தடுக்கும் விதமும் ஆகிய இவைகளே.

***

இந்திய நாணய நோட்டுகள் :—முத்திரைக் கடுதாசிகள் தபால் முத்திரைகள் எல்லாம் இந்தியாவிலேயே அச்சிடுவதற்காகப் பம்பாய்க்கு சமீபத்திலுள்ள நாசிக் என்னும் இடத்தில் 1924-ம் வருஷம் அச்சியந்திர சாலை கட்ட ஆரம்பித்து 1926-ம் வருஷம் முதல் முத்திரைகள் அச்சிட்டு வருகிறர். சில தினங்களுக்குமுன் நாணய நோட்டுகள் அச்சிடுவதற்கான இயந்திரசாலை முற்றுப்பெற்று வேலை ஆரம்பித்திருக்கிறர்கள்.

இங்கிலாந்தில் 1927-ம் வருஷம் தெருக்களில் நடந்த அபாயங்களினுல் 5,329 பேர் இறந்தார்கள். 148,000 பேர் காயப்பட்டார்கள்.

***

சிங்கப்பூருக்கும் கல்கத்தாவுக்கு மிடையில் ஆகாயப் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் ஏர் வே கம்பனியாரால் செய்யப்பட்டு வருகின்றது.

***

தூத்துக்குடியில் இப்போது நடக்கும் முத்துச்சிப்பி விற்பனையினுல் அரசாங்கத்துக்கு நல்லவருமானம் வருகிறது. இதுவரையிலும் 22லக்ஷம் சிப்பிகள் எடுக்கப்பட்டு இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு. விற்கப்பட்டிருக்கிறது.

***

பல்கேரியாவில் பூகம்பத்தினுல் சிர்பான் என்னுமிடத்தில் பீப்பிள்ஸ் பாங்கின் ஐந்தடுக்குக் கட்டிடம் இடிந்து விழுந்தது. இடிந்து விழுந்த கற்களை கிளறினபோது உள் அகப்பட்டிருந்த பாங்குக் காஷியர்உயிருடன் இருந்தாராம். உடனே அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கிறர்கள்.

***

மாண்டியில் மகாராசா பால்ய விவாகத்தைத் தடுப்பதற்காக சட்டம் ஏற்படுத்தி பெண்களுக்கு 13 வயதுக்குள்ளும் ஆண்களுக்கு 18 வயதுக்குள்ளும் விவாகம் செய்யப்படாதென்று கட்டளையிட்டிருக்கிறர். அவ்விதம் சட்டத்துக்கு மீறிச் செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

***

பம்பாயில் நெசவு சாலைகளில் வேலையாட்களைக் குறைத்தற்காகவும் புதுமாதிரியான யந்திரங்களை ஏற்படுத்தி ஒருவன் இரண்டு யந்திரங்களைக் கவனிக்க வேண்டுமென்று செய்ததாலும் ஆட்கள் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டார்கள். முக்கியமாய் கரீம்பாய் இபுருகீம் அன்லன்ஸ் உடைய ஆலைகள் வேலை நடவாமலிருக்கின்றன வேறு சில நெசவுச்சாலைகளிலும் வேலையாட்கள் நின்றுவிட்டபடியால் வேலை நடவாமலிருக்கின்றது. வேலைக்குப் போகாமல் நின்றுவிட்ட தொழிலாளர் தொகை 20,000.

***

மிஸ்மேயோ என்னும் அமெரிக்க மாது எழுதியிருக்கும் 'இந்திய மாதா' என்பதைப்போன்று 'இந்தியாவின் பெண்கள்' என்று மற்ருெரு புத்தகம் மிஸ் மாகிரெட் உவில்சன் என்பவளால் எழுதப்பட்டு 'இந்தியமாதா'வைப் பிரசுரித்த ஜோனத்தன்கேப் கம்பனியாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது நவீன கதை ரூபமாய் பஞ்சாப்தேசத்திலிருக்கும் தீண்டாதாருடையை சீவியத்தை வருணிப்பதாயிருக்கிறது. சிற்றின்பமே மிகவும் இந்தியாவில் பெருக்கமடைந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் இந்தியாவிலுள்ள எல்லாத் தீமைகளும் உற்பத்தியாயிருக்கின்றன என்பது மிஸ் உவில்சனின் முடிபு.

***

மத்திய ஆசியாவுக்கு ரேய் சாப்மன் என்பவர் ஆதி மனிதருடைய குறிகள் தேடுவதற்காக சென்றிருக்கிறர். இது அவருடைய நான்காவது பிரயாணம். இதைத் தூண்டினது சென்ற ஆண்டு பீக்கிங் என்னுமிடத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு மலையில் அகப்பட்ட ஒரு மனுஷனின் பல் இப்பல் 1,000,000 வருஷங்களுக்கு முன் வசித்த ஒருவனுடைய பல்லாயிருக்க வேண்டுமென்று உ[illegible]தசித்திருக்கிறர்கள். இதிலிருந்து மத்திய ஆசியாவே ஆதியில் மனிதன் உற்பத்தியான இடம் என்னும் கொள்கை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இன்னும் ஏதாவது ஆதாரங்கள் கிடைக்குமா வென்னும் நோக்கத்தினுல் இந்தப் பிரயாணம் ஆரம்பித்திருக்கிறர்.

(1) இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல்
அஷ்யூரான்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய். [1918

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)
Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.
Sir. ஹூகும் சந்த ஸரூப் சந்த K. T.
வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.
மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.
லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 2,21592. |
| வசூலிக்கப்படாத மூலதனம் | ரூ. | 16,25000. |

1. பதி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயின்தாஸ் கிர்தர்தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்லீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition** **Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)